Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, NOVEMBER 7, 2024
வியாழக்கிழமை நவம்பர் 07, 2024 | ஒளி: 10 கதிர்: 088 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

முன்னாள் சுங்க அதிகாரிகள் நால்வருக்கு

# 35 வருட கடூழிய சிறை

மிகப் பெரிய இலஞ்சம் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட முன்னாள் சுங்க அதிகாரிகள் நால்வருக்கு 35 வருடக் கடூழிய சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் புதன்கிழமை(06) விதித்துள்ளது.

தொடர்ச்சி P2





கமலா ஹாரிஸ்
ஜனநாயகக் கட்சி
224
66,227,894 வாக்குகள் (47.5%)

வெற்றிக்கு 270 மேல் தேவை

டொனால்ட் ட்ரம்ப்
குடியரசுக் கட்சி
277
71,173,126 வாக்குகள் (51.0%)





# டொனால்ட் ட்ரம்ப்பின் அதிர்ச்சி தரும் மறு பிரவேசம்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 'எலக்டோரல் காலேஜ்' (வாக்காளர் குழு) நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த நாட்டில் மொத்தம் 50 மாகாணங்கள் உள்ளன. அந்தந்த மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்.சிறிய மாகாணங்களில் 1 முதல் பெரிய மாகாணமான கலிபோர்னியாவில் 55 வரை வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

தொடர்ச்சி P2

அமெரிக்காவுக்கு

# 'இது பொற்காலம்'

## வெற்றி உரையில் டொனால்ட் ட்ரம்ப்

"இது அமெரிக்காவின் பொற்காலம், நாங்கள் மக்களை நிச்சயம் பெருமை கொள்ள செய்வோம். எங்களது பணி மற்றும் செயல்பாடு அப்படி இருக்கும். துணை ஜனாதிபதி தெரிவாகியுள்ள ஜேம்ஸ் டேவிட் வான்ஸுக்கு எனது வாழ்த்துகள். அவர் அந்த பொறுப்புக்கு சரியான தெரிவு என்று அமெரிக்க நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டின் முதல் குடிமகள் ஆகவுள்ள தன் மனைவி மெலானியாவுக்கும் அவர் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2





# டாக்டர் ஷாபி சிஹாப்தீன் முழுமையாக விடுவிப்பு

விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஷாபி சிஹாப்தீன் சகல குற்றச்சாட்டுக்களில் இருந்தும், விடுவிக்கப்பட்டார். குருநாகல் நீதவான் நீதிமன்றமே அவரை புதன்கிழமை (06) விடுவித்தது.

விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஷாபி சிஹாப்தீன் சந்தேகத்திற்கிடமான முறையில் சொத்துக்களை குவித்தமை, சட்டவிரோத கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார்.

நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, நீதிமன்றம் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது, அவர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்திலும் இருந்து அவரை விடுவித்தது.

ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே

# "மக்களுக்கு இருக்கும் ஒரே தீர்வு"



தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தல் மேடையில் இருந்து இந்த நாட்டு மக்களுக்குப் பல எதிர்பார்ப்புகளை வழங்கியிருந்தாலும், அது எதையும் அவரால் இன்று சாதிக்க முடியாது போயுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சுமத்தியுள்ள கட்டுப்பாடற்ற வரிச் சுமையை ஜனாதிபதியானதுடன் உடனடியாக நீக்குவேன் என தெரிவித்திருந்தார். அதை அவரால் நிறைவேற்ற முடியாது போயுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

14 நாட்கள் வேலைக்கு வராவிடின்

# "லயன் குடியிருப்புகளை கையகப்படுத்த முடியாது"

"தோட்டத் தொழிலாளர்கள் இரு வாரங்கள் வேலைக்கு வராவிட்டால் தோட்ட குடியிருப்புகளைக் கையகப்படுத்தும் எந்தவொரு முடிவையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை." என்று அமைச்சரவைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, அரசாங்க தகவல் திணைக்களத்தில், புதன்கிழமை(06) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



# "சந்திரிக்காவின் பாதுகாப்பில் பிரச்சினைகளே இல்லை"



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்பு நீக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ இல்லையென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, புதன்கிழமை (06) நடைபெற்றது. அதில், கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"முன்னாள் ஜனாதிபதிகள் குறிப்பாக சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் பாதுகாப்பு நீக்கப்படுவதாக அவர் தெரிவித்திருந்தார். அப்படி எந்த நீக்கமும் செய்யப்படவில்லை. 30 வரை குறைக்கப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். அது தவறு. அவருக்கு தற்போது 57 பேர் வழங்கப்பட்டுள்ளனர்." என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "வாழ்க்கையை இழந்து விட்டேன்"



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவராக 37 வருடங்கள் கடமையாற்றிய அருளானந்தன் பிலிப் குமார் மற்றும் நுவரெலியா மாவட்டம் ஹகுரன்கெத்த தொகுதி அமைப்பாளராகக் கடமையாற்றிய ஆர்.புவனேஸ்வரம் ஆகியோர் தமது சகல பதவிகள் மற்றும் கட்சி உறுப்புரிமைகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இதுவரை காலமும் எந்தவித கட்சி தாவல்களையும் மேற்கொள்ளாது ஒரே கட்சியான இலங்கை தொழிலாளர் காங்ரஸில் மாத்திரம் தாம் அங்கம் வகித்து வந்ததாகவும் அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கை

தொடர்ச்சி P2


# "ஜனாதிபதியுடன் நாங்கள் இணைந்து செயற்படுவோம்"

எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் கிடைப்பதாக இருந்தால் அது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலமாகத்தான் கிடைக்கும். வேறு எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் ஒரு முஸ்லிம் எம்.பி. வர முடியாது என்று முன்னாள் ஆளுநரும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஓட்டமாவடி - நாவலடி கேணிநகர் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



"மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்

PAGE 1 தொடர்ச்சிகள்

# டொனால்ட் ட்ரம்பின் அதிர்ச்சி தரும் மறு பிரவேசம்

ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் குறைந்தது 270 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் வேட்பாளர், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும். அந்த வகையில், ட்ரம்ப் 277, கமலா ஹாரிஸ் 224 என்ற எண்ணிக்கையை வசப்படுத்தி உள்ளனர்.

ஒரு மாகாணத்தில் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றால், அந்த மாகாணத்தின் 'எலக்டோரல் காலேஜ்' வாக்குகள் முழுவதும் வெற்றி வேட்பாளரைச் சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது. மாகாண வாரியாக வாக்கு எண்ணிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முன்கூட்டியே வாக்களிக்கும் வசதி உள்ளது. இதன்படி வாக்குப்பதிவு நாளுக்கு முன்பே 8.2 கோடி பேர் வாக்களித்திருந்தனர். அதாவது 40 சதவீதம் பேர் முன்கூட்டியே தங்கள் வாக்கைச் செலுத்தி விட்டனர். மீதமுள்ள வாக்காளர்கள் செவ்வாய்க்கிழமை (05) தங்கள் வாக்கைச் செலுத்தினர்.

அமெரிக்காவில் ஜனாதிபதி வேட்பாளருக்கு மக்கள் நேரடியாக வாக்களிப்பது இல்லை. அதற்குப் பதிலாக 'எலக்டோரல் காலேஜ்' (வாக்காளர் குழு) உறுப்பினர்களுக்கு வாக்களிப்பார்கள். அமெரிக்காவின் 50 மாகாணங்களில் ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 270 வாக்காளர் குழு உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறும் வேட்பாளர், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்பது கவனிக்கத்தக்கது.

# 'இது பொற்காலம்'

அமெரிக்க நாட்டின் 47ஆவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனல்ட் ட்ரம்ப், புளோரிடாவில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் நமக்காகச் சிறந்த முறையில் பணியாற்றிய எலான் மஸ்குக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஒரு ஜீனியஸ். நாம் அவரை பாதுகாக்க வேண்டும். அது நம் பொறுப்பு. அவரைப் போலவே தேர்தலில் நமக்காகச் சிறந்த முறையில் பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டுகளை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாரும் செய்யாததை நாங்கள் செய்வோம். ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளை குறைப்போம். நம் எல்லைகளை வலுவாக்குவோம். இராணுவத்துக்கு பலம் சேர்ப்போம். நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமை மற்றும் சுதந்திரத்தை அளிப்போம். நாம் இணைந்து இந்த இலக்கை அடைவோம். நாட்டின் எதிர்காலத்தை வளம் ஆக்குவோம். அதனை பாதுகாப்போம்.

உலகத்தின் மிக முக்கிய பணி இது. அதன் காரணமாகத் தான் இறைவன் எனது உயிரைக் காத்தார் என நினைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் நன்றி" என ட்ரம்ப் தனது வெற்றி உரையில் தெரிவித்தார்.

நம் நாட்டுக்குக் கடுமையாக உழைக்கும் திறன் கொண்ட ஜனாதிபதி மீண்டும் கிடைத்துள்ளார் என டொனால்ட் ட்ரம்ப் ஆதரவாளர்கள் தெரிவித்தனர். புளோரிடாவில் உள்ள மாநாட்டு மையத்தில் குடியரசுக் கட்சியின் நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், தன் குடும்பத்தினர் என அனைவருக்கும் மேடையில் இடங்கொடுத்திருந்தார் ட்ரம்ப். அவர் பேசி முடிக்கும் போதெல்லாம் ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்தனர்.



# "வாழ்க்கையை இழந்து விட்டேன்"

தொடர்பாக இன்னும் எவ்வித தீர்மானங்களையும் எட்டப்படவில்லை. எனது 37வருடகால அரசியலினால் தனது வாழ்க்கையை இழந்துள்ளதாகவும் அருளானந்தன் பிலிப் குமார் குறிப்பிட்டார்.

ஹட்டனில், புதன்கிழமை (06) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர்கள்,

இது தொடர்பான கடிதங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் .ஜீவன் தொண்டமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், காங்கிரஸின் தற்போதைய தலைமைத்துவத்தில் பல ஊழல் வழக்குகள் இருப்பதாகவும் அருளானந்தன் பிலிப் தெரிவித்தார். பெருந்தோட்ட மக்களின் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகக் கூறி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் அற்ற நாட்டை உருவாக்குவதற்குத் தலைமை தாங்கும் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவையும், மக்களையும் சுற்றி தொழிற்சங்க உறுப்பினர்களும் அவர்களது பிள்ளைகளும் திரண்டுள்ளதாக தெரிவித்த அருளானந்தன் பிலிப் குமார் மற்றும் ரி.புவனேஸ்வரம், தோட்டத்தொழிலாளர்கள் புத்திசாலித்தனமான முடிவை எடுத்துள்ளனர் என்றனர்.

# "ஜனாதிபதியுடன் நாங்கள் இணைந்து செயற்படுவோம்"

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், மட்டக்களப்ப மாவட்டத்தில் இருந்து ஒருவர் எம்.பி. ஆக வேண்டுமென்றால் 45,000 க்கும் மேற்பட்ட வாக்குகளை எடுக்க வேண்டும். காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி உள்ளிட்ட பிரதேச மக்கள் ஒன்றிணைந்தால் மாத்திரம்தான் எம்.பி.எடுக்க முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பகுதியில் இம்முறை 90,000 வாக்குகள் அளிக்கப்படவுள்ளன.

அதில், 55,000 பேர் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இந்தத் தேர்தலில் மேலதிகமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெறுவதற்காக வேண்டித்தான் நாங்கள் கூட்டம் போட்டுப் பாடுபடுகின்றோம்.

> **இந்தத் தேர்தலில் மேலதிகமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெறுவதற்காக வேண்டித்தான் நாங்கள் கூட்டம் போட்டுப் பாடுபடுகின்றோம். எங்களது கட்சிக்கு ஒரு எம்.பி. வருவதென்றால் நாங்கள் கூட்டமெல்லாம் போடத் தேவையில்லை**

எங்களது கட்சிக்கு ஒரு எம்.பி. வருவதென்றால் நாங்கள் கூட்டமெல்லாம் போடத் தேவையில்லை. ஏனென்றால் எங்களது கட்சிக்கு இலகுவாக 44,000 வாக்குகள் கிடைக்கும். நாங்கள் கூட்டம் போட்டுப் பேசுவதெல்லாம் 55,000 க்கு மேற்பட்ட வாக்குகளை எடுத்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டித்தான். பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி அமைக்க ஜனாதிபதிக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவை. ஆட்சி அமைப்பதற்குத் தேவை என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம் என்றார்.

# 35 வருட கடூழிய சிறை

முன்னாள் உதவி சுங்க அத்தியட்சகர் உபாலி குணரத்ன பெரேரா, சுங்க அத்தியட்சகர் வசந்த விமலவீர, சுங்க அத்தியட்சகர் உபாலி செனரத் விக்கிரமசிங்க மற்றும் சுங்க அத்தியட்சகர் சுதீர பராக்கிரம ஜினதாச ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

1,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதிரி பாகங்களை இலங்கை போக்குவரத்து சபையின் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்து வரி ஏய்ப்பு செய்து,150 மில்லியன் ரூபாயை இலஞ்சமாக கேட்டு, 125 மில்லியன் ரூபாவை, பெற்றுக்கொண்ட போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

35 வருட சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, ஒவ்வொரு குற்றவாளியும் தலா 125 மில்லியன் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே உத்தரவிட்டுள்ளார்.

# "மக்களுக்கு இருக்கும் ஒரே தீர்வு"

அவர் சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு தடவைகள் ஜனாதிபதி கலந்துரையாடினார், ஆனாலும் அந்த கலந்துரையாடல்கள் மூலம் நாட்டிற்கு சாதகமான முன்னேற்றம் எட்டப்படவில்லை. வரிகளைக் குறைக்கும் நிபந்தனையைச் சர்வதேச நாணயம் நிதியம் மறுத்துள்ளது என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

எனவேதான் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்தை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் மக்களின் தலையில் சுமத்தியுள்ள வரிச் சுமையிலிருந்து விடிவைப் பெற்றுத் தருவோம். சர்வதேச நாணய நிதியத்தின் புதிய உடன்படிக்கையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் எனவும் தெரிவித்தார்.

மத்திய கொழும்பு பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திப் பல உடன்பாடுகளை எட்டியுள்ளது. தற்போதல்ல, எதிர்க்கட்சியில் இருக்கும் போதே தாம் இவ்வாறான உடன்பாடுகளை எட்டியது.

33 சத வீதத்தால் மின்கட்டணத்தைக் குறைப்பேன், 6 மாதங்களுக்கு ஒரு தடவை அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பைப் பெற்றுத் தருவேன், நேரடி மற்றும் மறைமுக வரிகளை நீக்குவேன் என அனுரகுமார திசாநாயக்க மேடைக்கு மேடை தெரிவித்தார். ஆனால், ஆட்சிக்கு வந்து அதிகாரம் இருந்தும் சொன்னதைச் செய்தபாடில்லை.

> **பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்து, ஏற்றுமதியை ஊக்குவித்து, உற்பத்தித் தொழில்களை அதிகரித்து, மக்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இதுவரை 263,000 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் வங்குரோத்தடைந்து மூடப்பட்டுள்ளன**

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு நாட்டை காட்டிக்கொடுத்தது. வெளிநாட்டுக் கடனை 2033 முதல் செலுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியிருந்தாலும், முன்னாள் ஜனாதிபதி அதனை 2028 ஆம் ஆண்டு வரை குறைத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். கடன் திருப்பிச் செலுத்தும் காலம் 9 ஆண்டுகளில் இருந்து 4 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. முழு நாடும் 220 இலட்சம் மக்களும் தற்போது அழுத்தங்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இப்படியே தொடர்ந்தால், 2028இல் கூட நாடு வங்குரோத்து என்றே சொல்ல வேண்டியிருக்கும். சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகும். இவ்வாறு முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் 2033 ஆம் ஆண்டு வரை நியாயமான காலத்தை எம்மால் பெறலாம்.

அத்துடன், பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்து, ஏற்றுமதியை ஊக்குவித்து, உற்பத்தித் தொழில்களை அதிகரித்து, மக்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இதுவரை 263,000 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் வங்குரோத்தடைந்து மூடப்பட்டுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியில் 50% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குவதால், இத்தரப்பினரை மீண்டும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

# எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக எட்டு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது வியாழக்கிழமை (07) மாலை 4.00 மணி வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.. முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதன்படி, பதுளை, காலி, களுத்துறை, கண்டி, குருணாகல்,

மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கும்,

கேகாலை - தெஹியோவிட்ட, மாவனெல்லை, யட்டியந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, ருவன்வெல்ல, தெரனியகல, கலிகமுவ, அரநாயக்க மற்றும் இரத்தினபுரி - குருவிட்ட, எஹெலியகொடை ஆகிய பிரதேசங்களில் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

# இருவர் கைது

திவுலப்பிட்டிய, பல்லபான பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட

700 பூச்சிக்கொல்லி

மருந்து பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# PTA இன் கீழ் கைதான மூவர் விடுவிப்பு

க.அகரன்

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், பயங்கரவாத தடைச்சட்டத்தின் (Prevention of Terrorism Act ) கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த மூவரைக் குற்றமற்றவர்கள் என இனங்கண்ட வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அந்த மூவரையும், புதன்கிழமை (06) விடுவித்தார்.

வவுனியா பெரிய புளியங்குளத்தைச் சேர்ந்த, ஸ்ரீ சுப்பிரமணியம் கிரிஜா,கந்தப்பு கயேந்திரன், பூந்தோட்டத்தைச் சேர்ந்த காக்கை சிங்கம் காந்தரூபன், ஆகியோரே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

சாளம்பைக்குளம் பகுதியில் 2019 தை மாதம், தீங்கு விளைவிக்கக் கூடிய ஆயுதங்களான கிளைமோர் குண்டுகளை உடமையில் வைத்திருந்தனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் பி அறிக்கை தயார் செய்யப்பட்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த எதிரிகளுக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் நிறைவு பெற்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் தீர்ப்புக்காக, புதன்கிழமை (06) தவணை போடப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை தவிர்ந்து எவ்விதமான ஒப்புதல் சான்றிதழ்களும் அரசதரப்பு வழக்கு தொடுனரால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கத் தவறியுள்ளதாக நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் குறிப்பிட்டு அந்த மூவரையும் விடுவித்தார்.

# "லயன் குடியிருப்புகளை கையகப்படுத்த முடியாது"

இதன்போது, "கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் அரசாங்க பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் இயங்கும் தோட்டமொன்றில் உள்ள, தோட்டத் தொழிலாளர்களுக்கு முகாமையாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இரு வாரங்கள் தொடர்ச்சியாக வேலைக்கு வராவிட்டால் லயன் அறைகள் மீளப்பெறப்படும் என அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது " என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இந்த கடிதம் தொடர்பில் நான் தேடி பார்த்தேன். ஒரு அரச தோட்ட நிறுவனத்தின் தோட்ட அதிகாரியால் அனுப்பப்பட்ட கடிதம் இது. அரசாங்கம் என்ற வகையில் நாம் அப்படியொரு தீர்மானத்தை எடுக்கவில்லை. தோட்ட குடியிருப்புகளைக் கையகப்படுத்தும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. மேற்படி சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." எனவும் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

# “நாமே பலமான எதிர்க்கட்சி”

■ எம்.எப்.றிபாஸ்



அமையவிருக்கும் புதிய பாராளுமன்றத்தில், புதிய ஜனநாயக கட்சி அதிகமான ஆசனங்களைப் பெற்று வலுவான ஒரு எதிர்க்கட்சியாக அமையும் என்பதில் ஐயமில்லை என திகாமடுல்ல மாவட்ட நான்காம் இலக்க வேட்பாளர் யூ.கே.ஆதம்லெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் புதன்கிழமை (05) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்,

“இந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த போது தனது அனுபவத்தாலும், சமயோசித செயற்பாடுகளாலும் ஆக்கப்பூர்வமான முயற்சிகளைச் செய்து ஒரு ஸ்திரமான நிலைக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இட்டுச் சென்றார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவர்.

ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இந்த நாட்டை பொறுப்பெடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பியது மட்டுமல்லாமல், நாட்டு மக்களின் பசியைப் போக்கி அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் வரிசையில் நின்ற அந்த அவல நிலையையும் இல்லாமலாக்கி எதிர்மறையாக இருந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை நேரான பொருளாதார வளர்ச்சி வீதத்துக்குக் கொண்டு சென்ற மிக முக்கியமான பணியை அவர் செய்திருந்தார். இந்தப் பணி இந்த நாட்டு மக்கள் இன்று நிம்மதியாக வாழ்வதற்கு வழி வகுத்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. திகாமடுல்ல மாவட்டத்தில் புதிய ஜனநாயக கட்சியில் போட்டியிடுகின்ற எங்களது கட்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகின்ற நிலையை நாங்கள் செல்கின்ற இடங்களில் எல்லாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதன் அடிப்படையில், இக்கட்சி மாவட்டத்தில் 3 ஆசனங்களைப் பெறக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்த வெற்றி வாய்ப்புக்கு நீங்களும் பங்காளிகளாகும் வகையில் உங்கள் பெறுமதியான வாக்குகளை எனக்கு அளித்து நேர்மையான அரசியலுக்கு அதிகாரத்தைத் தோற்றுவிக்கப் பங்களிப்பு செய்யுமாறு வாக்காளர்களை கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.



## புறப்பட்டனர்...

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காகப் புறப்படவுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்களின் வெளியேற்று அணிவகுப்பு கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இடம்பெற்றுள்ளது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்காகச் செல்லவுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்களின் அணிவகுப்பு விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் தலைமையில் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் பெருமிதத்துடன் இடம்பெற்றுள்ளது.


மத்திய ஆபிரிக்க குடியரசில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காக புறப்படவுள்ள இலங்கை விமானப்படையின் 10ஆவது குழுவில் 20 அதிகாரிகளும் 88 படைவீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

2014ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இலங்கை விமானப்படை அமைதி காக்கும் கடமைகளில் ஈடுபட்டதன் மூலம் சுமார் 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை திறைசேரிக்கு வழங்கியுள்ளது.

ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்கள், மத்திய ஆபிரிக்க குடியரசில் போர் நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பதோடு, துருப்பு போக்குவரத்து, வி.ஐ.பி. போக்குவரத்து, உணவு மற்றும் சரக்கு போக்குவரத்து, உள் விமானங்கள், பாராசூட் தரையிறக்கம், மருத்துவ போக்குவரத்துக்கு ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்கி வருகிறது.

## “காங்கிரஸின் வெற்றியே மலையகத்தின் பாதுகாப்பு”

■ பி.கேதீஸ்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருப்பதால்தான் மலையகத்தில் காணிகள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ் இல்லாவிட்டால் காணிகள் என்றோ பறிபோய் இருக்கும். எனவே, மலையக மக்களின் இருப்புக்காக, பாதுகாப்புக்காகக் காங்கிரஸ் வேட்பாளர்களை நிச்சயம் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.


மஸ்கெலியா பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

“நாடு பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருந்தவேளை, வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டு வழிநடத்தியவர்தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலின் போது, அவரை ஆதரிக்குமாறு அறிவித்திருந்தோம். அதுமட்டுமல்ல, அவர் தலைமையிலான ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்குப் பல சேவைகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது. காணி உரிமையை வழங்குவதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டது.

சம்பள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை அதுமட்டுமல்ல அவர் தலைமையிலான ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்குப் பல சேவைகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது. காணி உரிமையை வழங்குவதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டது. சம்பள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாட்டையும் பாதுகாத்து மலையகத்துக்குரிய அபிவிருத்திகளுக்கான உதவிகளையும் ரணில் விக்ரமசிங்க வழங்கினார். எமது மக்கள் அவருக்கு வாக்களித்தனர். ஏனையோர் வாக்களிக்கவில்லை. அதனால் பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் எமது மக்கள் ஏன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும்? இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான் மக்களுக்காகக் குரல் கொடுக்கும், மக்களுக்காகச் சேவைகளைச் செய்துள்ளது. உரிமையுடன் வாக்கு கேட்பதற்குரிய தகுதி எமக்குத்தான் உள்ளது. காங்கிரஸ் இல்லாவிட்டால் மலையகத்தில் காணிகளெல்லாம் பறிபோய் இருக்கும். நாம் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களிடம் வரவில்லை. என்றும் மக்களுடன் தான் இருக்கின்றோம். ஆனால், தேர்தல் காலத்தில் மட்டும் தோட்டங்களுக்கு வருபவர்கள் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என விமர்சித்துக் கொண்டுள்ளனர் என்றார்.

## ஓடையில் பயணித்த கெப்; இருவர் பலி; இருவருக்கு பாதிப்பு



கொஸ்கம, அஸ்வத்த தும்மோதர ஓடையூடாக பயணித்த கெப் வண்டியொன்று வெள்ளத்தில் சிக்கி அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரிபத்கொட-அசோக உயன பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய லொகு லியனகே வண்ண கப்ரால் மற்றும் மொனராகலை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பி.தசுன் பெர்னாண்டோ ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த கெப் வண்டி மாணக்கட ர - முகெவத்த வீதியில் ஓடையைக் கடந்து செல்ல முற்பட்ட நிலையில், வெள்ளத்தில் சிக்கிக் கவிழ்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்களும் அங்குள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சீருடை துணிக்கு சீனா உதவி

எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குத் தேவையான பாடசாலை சீருடை துணியின் மொத்த தேவை 11.82 மில்லியன் மீற்றர்களாகும். குறித்த முழுத் தொகையை நன்கொடையாக வழங்குவதற்கு சீன அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த துணித் தொகைக்குரியவாறு கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரிகளுக்கமைய, இலங்கை நெசவு மற்றும் ஆடைக் கைத்தொழில் நிறுவனத்தின் (SLITA) மூலமாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னர், குறித்த சீருடைத் துணிகள் பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்குப் பொருத்தமானதென விதந்துரைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025ஆம் ஆண்டிற்கான அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவெணாக்களில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு சீருடை துணியை விநியோகிப்பதற்கான சீன அரசின் நன்கொடையைப் பொறுப்பேற்பதற்குக் கல்வி,விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் என்றவகையில், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஸ்ரீமான் சாய் முரளியுடன் சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் பதில் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர், கலைத்துறை சார்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்திய துணைத்தூதர் ஸ்ரீமான் சாய் முரளியுடன் கலந்துரையாடல் ஒன்றை ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (05) மேற்கொண்டுள்ளனர்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தினை பராமரித்தல் மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பாக இந்த கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, கலை, கலாசார, நிகழ்வுகளை நடத்துதல், உரியவாறு ஒழுங்கமைத்தல், சமூகத்தின் பாவனைக்கு விடுதல் மற்றும் கலாசார மத்திய நிலையத்தினை தொடர்து இயங்கு நிலையில் வைத்திருத்தல் தொடர்பிலும் உரையாடப்பட்டுள்ளதுடன், கலாசார மத்திய நிலையத்தினை உரிய திணைக்களங்களிடம் ஒப்படைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## ஐஸுடன் மூவர் கைது

சுமார் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமதியுடைய ஐஸ் போதைப்பொருளுடன், இளைஞன் உட்பட இரண்டு பெண்கள் தெல்கொட, உடுப்பில பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 01 கிலோ 15 கிராம் ஐஸ் போதைப்பொருள், 04 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் ஐஸ் போதைப்பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக மெகவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய வாசிப்பு மாத

## பொது அறிவு போட்டியில் வெற்றி

■ நூருல் ஹுதா உமர்



கடந்த 2004ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ‘வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்’ எனும் தொனிப்பொருளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் 2024ஆம் ஆண்டுக்கான வாசிப்பு மாத நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

தேசிய வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தைச் சிறப்பிக்கும் வகையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) நூலக குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சி நூலக பொறுப்பாளர் ஏ.எல்.நஸீம் தலைமையில் கல்லூரியின் நவீனமயப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கல்லூரியின் முதல்வர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் (SLEAS) கலந்து கொண்டார். மாணவிகளின் பொது அறிவின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் நூலக குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியில் மஹ்மூத் மகளிர் கல்லூரி தரம் 10 மற்றும் 11 பிரிவு மாணவிகளுக்கிடையே தலா ஆறு பேர் கொண்ட இரு குழுக்களுக்கிடையில் மூன்று கட்ட சுற்றுப்போட்டிகளாக இடம்பெற்றன.

பொது அறிவுப் போட்டியின் நடுவர்களாகக் கல்லூரியின் உதவி அதிபர்களான எம்.எஸ்.மனுானா, என்.டி.நதீகா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் எஸ்.எச்.ஆமினா உம்மா, தொகுப்பாளராக ஆசிரியர் எம்.ஏ.அஸ்வர், முழுமையான கணினி மயப்படுத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிக்குக் கணினி தொழில்நுட்ப உதவியாளர் முஸ்தபா முபாரக் ஆகியோர் நெறிப்படுத்தி மிக நேர்த்தியாக நடத்தியிருந்தனர்.

இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற பொது அறிவு போட்டியில், தரம் 11 மாணவிகள் 100 புள்ளிகளையும் தரம் 10 மாணவிகள் 70 புள்ளிகளைப்பெற்ற கொண்டதுடன், மேலதிக 30 புள்ளிகளினால் தரம் 11 மாணவிகள் சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டனர். போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்ற அதிதிகள் மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம்.சமதா மசூது லெவ்வை, ஏ.எச்.நதிரா, உதவி அதிபரகளான எம்.எஸ்.மனுானா, என்.டி.நதீகா, ஏ.தஸ்லிமா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









# உலகின் சக்திவாய்ந்த ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப்

உலகின் மிக முக்கிய தேர்தலாகக் கருதப்படும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்ப் 277 ஆதரவைப் பெற்று, இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். அவருக்கு கடுமையான போட்டியாக இருந்து இந்திய வம்சாவளியாக இருந்த கமலா ஹாரிஸ் 224 ஆதரவைப் பெற்றுத் தோல்வியடைந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவோர், உலகின் சக்திவாய்ந்தவராக ஆகிவிடுவார். அவர், பிரிட்டனின் மன்னர் சார்லஸை விடச் சக்திவாய்ந்தவர். இரண்டாம் எலிசபெத் மகாராணி உயிருடன் இருந்திருந்தால் அதைவிட அதிக சக்தி வாய்ந்தவர் என்று சொல்லப்படுகின்றது.

இந்த முதலாளித்துவ உலகில் அமெரிக்க ஜனாதிபதிக்கு முடியாதது எதுவுமில்லை. மூன்றாம் உலகப் போர் பெரும்பாலும் அமெரிக்க ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படுகிறது. அமெரிக்கா உலகின் பணக்கார நாடு. உலகிலேயே அதிக இராணுவ ஆயுதங்களை வைத்திருக்கும் நாடு அமெரிக்கா. அமெரிக்காவும் அதிகம் படித்தவர்களைக் கொண்ட நாடு. இதன் காரணமாக, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் உலகின் தீர்க்கமான காரணியாக மாறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை உலகநாடுகள், கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தன. பெறுபேறுகள் வெளியானதும் தன்னுடைய எக்ஸ் தளத்தில் டொனால்ட் ட்ரம்ப்புக்கு வாழ்த்து தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா - அமெரிக்கா இடையேயான விரிவான, உலகளாவிய, உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த ஆவலுடன் இருப்பதாகக் கூறியுள்ளார். “வரலாற்றுச் சிறப்பு மிக்க தேர்தல் வெற்றிக்கு எனது நண்பர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப்புக்கு கடும் சவாளாக விளங்கிய, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 60 வயதான கமலா ஹாரிஸ் இந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். டொனால்ட் டிரம்ப் முற்றிலும் ஒரு தேசியவாதி. அவர் வெள்ளைத் தோல் மற்றும் வெள்ளை பாரம்பரியத்தை மதிக்கிறார் மற்றும் பிற நாடுகளில் இருந்து குடியேறுபவர்களை வெறுக்கிறார் மற்றும் பிற நாடுகளில் போர்கள் அல்லது பிற சர்ச்சைகளில் தலையிட விரும்பவில்லை.

ட்ரம்ப்பைச் சுற்றி எப்போதும் தேசியவாத மக்களின் நதி ஓடுகிறது. அதனால்தான் என்னவோ, தன்னுடைய வெற்றி உரையின் போது, “அமெரிக்கர்கள் எங்களுக்கு ஒரு சக்திவாய்ந்த ஆணையை வழங்கியுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.

யாரும் செய்யாததை நாங்கள் செய்வோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் வரிகளைக் குறைப்போம். நம் எல்லைகளை வலுவாக்குவோம். ராணுவத்துக்கு பலம் சேர்ப்போம். நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமை மற்றும் சுதந்திரத்தை அளிப்போம். நாம் இணைந்து இந்த இலக்கை அடைவோம். நாட்டின் எதிர்காலத்தை வளம் ஆக்குவோம். அதனைப் பாதுகாப்போம் என்று தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்திருந்தாலும், உலகத்தில் மூன்றாம் உலக யுத்தத்துக்கான மேகம் கருக்கட்டிக்கொண்டிருக்கின்றது. அதனைப் பற்றவைத்து விடக்கூடாது என்பதே உலக சமாதானத்தை விரும்புகின்றவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப வன்முறைகள் பலவிதமான முறைகளில் நடந்தபடி இருப்பது பலருக்குத் தெரியாது. மௌனமாகவே இருந்தபடி, குடும்பத்தில் ஒருவரைப் பலரும் இணைந்து தூற்றுவதை இரகசியமாகச் செய்வதுண்டு.

மனைவி பயந்த சுபாவமானவளாக, அப்பாவியாக இருந்தால், அவர் வாழ வந்த குடும்பத்தில் கணவனது உறவுக்காரர்கள் மிரட்டிப் பயமுறுத்தியும் கிண்டலடித்தும் அவரது மனத்தைக் காயப்படுத்திவிடுவார்கள். எதிர்த்துப் பேசினால் பொல்லாதவள் என்பார்கள்.

எடுத்ததற்கெல்லாம் குறை சொல்வதுடன், தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டு, அந்தப் பரிதாபமான இல்லத்தரசியைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவார்கள். குறைகளைச் சொல்லும்போது, தங்களுக்குள் மெல்லிய குரலில் இல்லாத பொய்களைச் சொல்வார்கள். ஆனால், வெளியுலகில் நடிப்பார்கள்.

சில வீடுகளில், மனைவியே கணவனைக் கௌரவமாக நடத்தாமல் இருப்பதுண்டு. எவர் மனதையும் சூட்சுமமான வழிமுறைகளில் துன்புறுத்துதல் அடாத செயலாகும். மௌன யுத்தம் குடும்பங்களில் நடக்கலாகாது.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

முருகானந்தம் தவம்

# பிரதிநிதித்துவம் குதிரை கொம்பாகவே உள்ளது

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிவாகும் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக இம்முறை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5,006 வேட்பாளர்களும் 3,346 சுயேச்சைக் குழு வேட்பாளர்களுமாக 8,352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 28 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 2,068 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இலங்கையில் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தத் தமிழர்கள் தேசிய இனமாகக் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். இதில் அம்பாறை மாவட்டத்தில் 7 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 4 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் என 16 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு வவுனியா மற்றும் மன்னார் அடங்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் கிளிநொச்சி, யாழில் அடங்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களுமாக 12 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன. வாக்கு மொத்தமாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 28 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் தொகுதியில் 23 அரசியல்கட்சிகள் 21 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 6 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்களும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் 24 கட்சிகள், 27 சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், 6 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 423 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இதற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள 12 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 819 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதே போன்று, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 22 கட்சிகளினதும் 27 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 5 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 392 வேட்பாளர்களும் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 14 கட்சிகளினதும் 17 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 4 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 217 வேட்பாளர்களும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் (அம்பாறை மாவட்டம்) 20 கட்சிகளினதும் 44 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 7 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கமைய, கிழக்கு மாகாணத்திலுள்ள 16 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 1,249 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த எண்ணிக்கைகளுக்கமைய எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 28 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 2,068 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதன் மூலம் தமிழ் பிரதிநிதித்துவ ஆசனங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை பாராளுமன்ற தேர்தல்களில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியாக ‘தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு’ என்ற பெயரில் களமிறங்கிய முதல் தேர்தலான 2004இற்கான பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 633,654 வாக்குகளைப் பெற்று நேரடி பாராளுமன்ற ஆசனங்களாக 20 ஆசனங்களையும் தேசியப் பட்டியல் ஆசனங்களாக 2 ஆசனங்களையும் பெற்று 22 ஆசனங்களுடன் பலமான அணியாக ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’ என்ற ஒற்றுமையுடன் தமிழ்த் தேசிய கட்சிகள் பாராளுமன்றம் சென்றன.

இதில் வடக்கில் யாழ். மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 8 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன. வன்னி மாவட்டத்திலிருந்த 6 ஆசனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களையும் ஐ.தே.க. ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது. இதன்மூலம் வடக்கு மாகாணத்திலிருந்த 15 ஆசனங்களில் 13 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த 5 ஆசனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் திகாமடுல்ல அதாவது, அம்பாறை மாவட்டத்திலிருந்த 7 ஆசனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 1 ஆசனத்தையும் கைப்பற்றியது. திருகோணமலை மாவட்டத்திலிருந்த 4 ஆசனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆசனங்களைக் கைப்பற்றியது. இதன்மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்த 16 ஆசனங்களில் 7 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

இவ்விரு மாகாணங்களிலும் பெற்ற வாக்குகளின் அடிப்படையில், இரு தேசியப் பட்டியல் ஆசனங்களும் கிடைத்ததால் மொத்தமாக 22 பாராளுமன்ற ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

இதற்குப் பின்னர் நடந்த 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 நேரடி ஆசனங்களும் ஒரு தேசியப் பட்டியல் ஆசனமுமாக 14 ஆசனங்களைப் பெற்று வீழ்ச்சியைச் சந்தித்தது. இதில் யாழ். மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னி மாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்திலிருந்த 7 ஆசனங்களில் 1ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்திலிருந்த 4 ஆசனங்களில் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

இதற்குப் பின்னர் நடந்த 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 14 நேரடி ஆசனங்களும் 2 தேசியப் பட்டியல் ஆசனங்களுமாக 16 ஆசனங்களைப் பெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னி மாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 4 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்திலிருந்த 7 ஆசனங்களில் ஒரு ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்திலிருந்த 4 ஆசனங்களில் 1ஆசனத்தையும் கைப்பற்றியது.

இதற்குப் பின்னர் நடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9 நேரடி ஆசனங்களும் ஒரு தேசியப் பட்டியல் ஆசனமுமாக 10 ஆசனங்களைப் பெற்றுப் பெரு வீழ்ச்சியைச் சந்தித்தது. இதில்யா ழ். மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 3 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றன.

வன்னி மாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த 5 ஆசனங்களில் 2 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்திலிருந்த 7 ஆசனங்களில் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை. திருகோணமலை மாவட்டத்திலிருந்த 4 ஆசனங்களில் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

யாழ். மாவட்டம் முன்னர் 9 பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருந்தது. ஆனால், வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் அது பின்னர் 7 ஆனது. தற்போது அந்த ஆசனங்களின் எண்ணிக்கை 6 ஆக குறைந்துள்ளமை தமிழ் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதனால் தமிழ் கட்சி வேட்பாளர்களும் தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள மிகப்பெரும் பிரசாரங்களை செய்ய வேண்டியுள்ளதுடன், தமிழ் கட்சிகளுக்கிடையே கடும் போட்டிகளும் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை, கிழக்கில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவம் குதிரைக் கொம்பாகவேயுள்ளது.அம்பாறை மாவட்டத்தில் கடந்த முறை தமிழர் பிரதிநிதித்துவ ஆசனம் கிடைக்கவில்லை. திருகோணமலையில் இரா.சம்பந்தன் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைத் தக்கவைத்து வந்த நிலையில், அவரின் மரணத்தினால் அந்த ஆசனமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறு வடக்கு,கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவ ஆசனங்கள் குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அதனைப்பற்றி கொஞ்சம் கூட அக்கறையோ கவலையோ, அதன் விளைவாக ஏற்படப்போகும் ஆபத்துக்களை அறிந்து கொள்ளும் அறிவோ இன்றி வழக்கம் போலவே ஒற்றுமை விடயத்தில், பிக்கப்பட்ட, கழுத்தறுப்பு அரசியல், குழிபறிப்பு அரசியலில் யாருமே நிகராக நிற்க முடியாத தமிழ் தேசியக் கட்சிகள்’ நீயா, நானா தலைக்கனப் போட்டியிலும், வீடா, சங்கா, மானா என்ற போட்டியில் தமக்குள் முட்டி மோதி தமிழர் அரசியலைப் பலவீனப்படுத்தி வருகின்றன.

எனவே, நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான பிளவுகள், யாழ். மாவட்டத்திற்கான ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டமை, தமிழ் மக்களிடையில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி, பிரபலமானவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியமை, வெற்றி பெறக்கூடியவர்களை வெளியேற்றி அல்லக்கைகளை வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டமை இரா.சம்பந்தனின் மறைவு போன்ற அரசியல் கள சூழலினால் வடக்கு,கிழக்கில் தமிழ்ப் பாராளுமன்ற ஆசனங்கள் பறி போவதற்கான வாய்ப்புக்களே பிரகாசமாகவுள்ளன.

## கடிதங்கள்

### குரங்குகளால் அச்சம்


மஸ்கெலியா - நல்லத்தண்ணி நகரில் குரங்கு கூட்டம் அதிகரித்து வருவதனால் சுற்றுலாப் பயணிகள், சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

மேலும், குறித்த பகுதியில் சுற்றுலா விடுதியொன்றில் பெண் ஒருவரைக் கடித்து படு காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என நல்லதண்ணி விருந்தினர் விடுதி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கூட்டமாக வரும் குரங்குகள் விடுதிகள், கடைகள், வீடுகளில் புகுந்து உணவை எடுத்துக்கொண்டு ஓடுவதாகவும், சில சமயம் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சாப்பிடும் இடங்களுக்குள் புகுந்து உணவு உண்ணும் போது, மேசையிலிருந்த உணவை எடுத்துக்கொண்டு குரங்குகள் போவதாகவும் விடுதி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதி உரிமையாளர்கள், யாத்திரிகர்களும், மற்றும் பிரதேச மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

-செ.தி.பெருமாள்



# கல் மனசு



சாந்தி ஜொ

**பிரிவதில் அக்கறை காட்டும் சிலருக்கு ஏன் அன்பு புரிவதில்லை. அவள் துணையாக நினைத்துக் கொண்டிருந்த சிலைக்குக் கல் மனதா, அவளைத் துரத்திய மகனுக்கு கல் மனதா என்ற கேள்விகளோடும் அவளை இந்த வருடம் ஊருக்கு செல்லும் வழியில் பார்த்தால் பேச வேண்டும் என்ற ஏக்கத்தோடும் செல்கிறேன்**

சென்னையிலிருந்து அலங்காநத்ததிற்கு செல்லும் பேருந்தில் ஏறியதும் கிடைத்த இருக்கையில் அமர்ந்து பயனிக்கும் நான், இந்த முறை ஜன்னல் ஓர இருக்கையில் அமர்ந்து செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். போகும் வழியில் ரோட்டில் அவளை எங்கேயாவது காண்பேனா என சிந்தித்துக் கொண்டே பயணத்தைத் தொடங்கினேன். சாத்தியமா என்று தெரியவில்லை? போன வருடம் நடந்த அந்த நிகழ்ச்சி என் நினைவிலிருந்து இன்னும் நீங்கவில்லை. அவளின் குரல் என் காதில் கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருட அலுவலக விடுமுறையின் போதும் அலங்காநத்தத்தில் உள்ள மாமாவின் வீட்டிற்குச் செல்வது என் வழக்கம். போன வருடம் அங்குச் சென்றபோது, தான் அவளைக் கண்டேன். ஊரிலுள்ள பேருந்து நிறுத்ததின் அருகில் அமைந்துள்ள சிந்தனையாளரின் சிலைக்குக் கீழே அவள் அமர்ந்து இருந்தாள். அழுக்கேறிய தலையும், கிழிந்த சீலையும் உடுத்தி, வாயில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்.

ஊரில் உள்ள ஒரு சில வீடுகளில் மிச்சமான சாப்பாடுகள் அவளுக்குக் கிடைக்கும். அது போக பேருந்துக்காகக் காத்திருக்கும் சில பேர்களிடம் கை ஏந்தி பிச்சையும் எடுப்பாள்.

அவளுடைய இருப்பிடம் அந்த சிலையின் கீழ் உள்ள மண் தரைதான். ஒருநாள் மாமாவுடன் பக்கத்து ஊர் கடைக்குச் சென்று இரவு ஊருக்குத் திரும்பிய போது, அவள் யாரோ ஒருவருடன் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. கூர்ந்து கவனித்துப் பார்க்கையில் அவள் அழுது பேசிக் கொண்டிருப்பது அருகில் நின்று கொண்டிருந்த சிலையோடு என்பதைப் புரிந்து கொண்டேன்.

“என் மேல கோவமா இருக்கியா? மன்னிச்சுகோ. பக்கத்துல இருக்க சக்கரத்தாழ்வார் கோயில ஏதோ விசேசம் போல. நிறைய சனங்க சாமி கும்பிட வந்து இருந்தாங்க. எல்லாரும் சாப்புடு முடிஞ்சதும் நான் ஏதாவது சாப்புட கிடைக்கும்னு நின்னுட்டு இருந்தேன். அப்ப ஒருத்தன் வந்து இங்கலாம் நீ நிக்க கூடாதுனு சொல்லி என்னைய தள்ளிவிட்டான். பக்கத்துல இருக்க முள்ளு செடில விழுந்துட்டேன். அதான் கையில காயம். ஆனா தள்ளிவிட்டவன பார்க்கும் போது என் புள்ள மாதிரியே இருந்தான். என் புள்ள... என் புள்ள... என்ன செய்றானோ? அவன் என்னைய வீட்ட விட்டு துரத்திட்டான். ஆனா அவன என் மனசுல இருந்து துரத்த முடியல. அவன் நல்ல இருக்கணும். அது போதும் எனக்கு”

மாமாவிடம் அவளைப் பற்றி விசாரித்த போது, 1 வருடமாக அந்த சிலைக்குக் கீழே தான் அவள் பிச்சை எடுத்து உறங்குவாள் என்றும் பைத்தியக்காரதனமாகச் சிலையிடம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பாள் என்றும் சொன்னார்.

அடுத்த நாள் காலையில் அவள் அதே போல சிலையிடம் “எல்லாரையும் கண்கொத்தி பாம்பு போல நீ பாத்துட்டு இருக்க. ஆனா ஒன்ன பாக்க என்ன தவிர யாரும் இல்லயே. உனக்கு நான் இருக்கேன், எனக்கு நீ இருக்க” என்று சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் உருவத்தை வைத்து பிச்சைக்காரி என சொன்னாலும் அவள் பேசுவதைக் கேட்கும் போது, ஏதோ அவளிடம் போய் பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. மனம் அவளிடம் பேசு என்று சொன்னாலும் கால்கள் நகரவில்லை.

சில நாட்கள் கழித்து தெருவை அகலப்படுத்தும் திட்டத்திற்காக அதிகாரிகள் அங்குப் பார்வையிட வந்து அந்த சிலையை அப்புறப்படுத்தச் சொல்லி ஆணையிட்டார்கள்.


சிலையை அப்புறப்படுத்த வந்த வேலையாட்கள் மீது அவள் மண்ணை வீசி எறிந்தாள். கோவமாகத் திட்டினாள். அழுது புரண்டாள்.

கடைசியில் அந்த வேலையாட்கள் அவளைத் தூக்கி ரோட்டின் மறுபக்கம் போட்டார்கள். அங்கு வந்த லாரியில் அந்த சிலை ஏற்றப்பட்டது. லாரி செல்லும் வரை கதறிக் கதறி அழுதாள். “அய்யோ... ஏன் சாமி என்னைய மனுசப் பிறவிய படச்சீங்க. எனக்கு யாரு இருக்க?” என்று கத்தினாள்.

அடுத்த நாள் காலையில் சிலை இருந்த இடத்தில் அவளைப் பார்ப்பதற்காகச் சென்றேன். அவள் அங்கு இல்லை. ரோட்டின் மறுபக்கம் போய் பார்த்தேன். அங்கேயும் அவள் இல்லை.

அதன் பிறகு சென்னைக்கு வந்த ஒரு வருடத்தில் அவளைப் பற்றி நினைவுகள் அடிக்கடி எனக்குள் தோன்றும். ஒன்றில் அன்பு வைக்கும் மனம் ஏன் அதைப் பிரிய மட்டும் அனுமதிக்க மாட்டேன் என்கிறது. பிரிவதில் அக்கறை காட்டும் சிலருக்கு ஏன் அன்பு புரிவதில்லை. அவள் துணையாக நினைத்துக் கொண்டிருந்த சிலைக்குக் கல் மனதா, அவளைத் துரத்திய மகனுக்கு கல் மனதா என்ற கேள்விகளோடும் அவளை இந்த வருடம் ஊருக்கு செல்லும் வழியில் பார்த்தால் பேச வேண்டும் என்ற ஏக்கத்தோடும் செல்கிறேன்.

# பயணப்படுவதில் சுவாரஸ்யம்





சுப்பிரமணியன் ஜனுர்ஷா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

நண்பர்கள் வட்டாரங்கள் எப்போதுமே நம்மை சற்று உலகத்தின் வேறொரு பரிமாணத்திற்கே அழைத்துச் செல்லும் அற்புதமான ஒரு உறவு. எந்த வயது பிரிவினரது நட்பாக இருப்பினும், அவர்கள் ஒன்று சேர்ந்து வெளியிடங்களுக்குப் பயணிக்க எத்தனையோ திட்டங்கள் தீட்டுவர். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அத்தனை பாடுகள். அப்படித்தான் நாங்களும் எத்தனையோ சுற்றுலாவிற்குத் திட்டம் தீட்டியது ஏராளம். இறுதியில் அவை வெறும் திட்டங்களாகவே இருக்கக் கடந்து சென்றிருக்கின்றோம். ஏமாற்றங்களின் விரக்தியில் இனி சுற்றுலா பற்றி நான் பேசப்போவதில்லை என விளையாட்டாக முகம் திருப்பினாலும் சுற்றுலா செல்வது பற்றிப் பேச மாட்டார்களா? திட்டமிட மாட்டார்களா? என்று அவ்வப்போது மனதில் ஆசை துளிர்விடும். “ரொம்ப பிரஷரா (pressure) இருக்கு எங்காவது வெளியே செல்வோமா?” என நண்பியின் குரல் தொனித்தது ஒரு நாள். அப்பாடா மகிழ்ச்சி என்ற குதூகலம் என்னுள் பரபரக்க எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், நானுண்டு என் வேலையுண்டு என செவியை அவர்கள் பக்கம் சாய்த்து எதிர்பார்ப்போடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

எப்படியோ எதிர்பாராமல் தீட்டிய சுற்றுலா பயணம் நாளை நடைமுறைக்கு என்ற முடிவுக்கு வந்தார்கள். என் ஆசை நிறைவேறப் போகிறது என்ற துடிப்பில் எந்த ஆடை அணிவது? எத்தனை மணிக்குப் புறப்படுவது என நாளைய விடியலைக் கடப்பதற்குள் அத்தனை கனவுகள் என்னைத் தூங்க விடவில்லை. கதிரவன் வந்துவிட்டான் எழும்பு கிளம்பு என அடித்துப் பிடித்து யாழ்ப்பாணத்துப் பேருந்து தரப்பிடத்தில் இருந்த பெரியவரிடம் நயினா தீவுக்கு எப்படி ஐயா செல்வது? என வழி கேட்டோம். தீவுக்கு எப்படிச் செல்வது என்பது கூட தெரியாமல் ஏதோவொரு ஆர்வத்தில் கிளம்பி விட்டோம். குறிக்கட்டுவான் என வித்தியாசமான பெயருடன் கூடிய பேருந்தைக் காட்டினார். பெரியவரின் வழிகாட்டலுக்கு இணங்க நயினாதீவுக்கு செல்லும் வழியை நன்கு கேட்டுக் கொண்டாலும் ஒன்றும் புரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் காலத்திலே நயினா தீவுக்கு ஒரு முறை சென்று வா... படகில் செல்லலாம்.. அன்னதானம் சாப்பிடலாம்... என மாமா அடிக்கடி கூறியது நினைவுக்கு வந்தது. அதையும் அசைபோட்டுக் கொண்டு உட்கார இடமில்லா பேருந்தில் எறிய போது தான் அதுவரையில் இந்த பயணம் தொடரும் என்பதில் இல்லாத நம்பிக்கை வந்தது. நம்பிக்கை விதையை விதைத்தபடியே நாகபூசணி அம்மனை தரிசிக்கப் போகின்றோம். படகில் பயணிக்கப் போகின்றோம் என்ற கற்பனைகளோடு பயணம் ஆரம்பமானது. அது ஒரு ஒன்றரை மணி நேர பயணம். இருக்கை இல்லா பேருந்தில் இருந்த பாதிஜனம் வண்ணமயமான ஆடைகளுடன் இன்னொரு பெண்ணை கவரும் நகை நட்டுக்களுடன் வேட்டியும் சேலையுமாய் பேருந்து இருக்கைகளை நிரப்பி இருந்தனர். இதைப் பார்த்ததும் எப்போதும் போல இன்றைக்கும் இருக்கைகள் இல்லை என மனதை தேற்றிக்கொண்டு ஒன்றுமில்லாத விடயத்திற்குச் சிரிக்கும் என் நண்பிகளுடன் சிலாகித்து பயணப்பட்டேன்.

உட்கார இடம் இல்லா பேருந்தில் நின்றவாறு பயணித்த நீண்ட தூரப் பயணமது. சுவாரஸ்ய பேருந்து பயணங்கள் எண்ணற்றவை இருந்தும் இந்த அழகிய வீதிகளைப் பேருந்து கடந்து சென்ற தருணம் கண்களை இயற்கையில் தொலைக்கச் செய்தது. மழலை சிரிப்போடு கண்களைச் சிமிட்டாது என்னைப் பார்த்துக் கொண்டிருந்த மழலை மொழி பயணத்தின் வலிகளைச் சற்று களிப்பூட்டியது இன்றும் நீங்காமல் என்னுள் பதிந்துள்ளது.

பேருந்தின் சாரதி ஒரு 90’s கிட் போல என அவரையும் சற்று கிண்டல் செய்து கொண்டு புரியாத பழைய பாடல்களை அடுத்த பாடல் உனக்குத் தான் என போட்டிப் போட்டுக்கொண்டு கைகளை அசைத்தபடி நிற்க இன்னும் எவ்வளவு தூரமப்பா சற்று உட்காருவேன் என கால்களும் சொல்லிவிடக் கூடும் அளவிற்குக் களைத்து விட்டோம். கனதூரம் ஆயினும் மனது ஆசைகளின் மேலிட்டவளாய் பயணப்பட்ட சுவாரஸ்யமான பேருந்து பயணம் அது.

இதோ இன்னும் கொஞ்ச தூரம் தான் என அருகிலிருந்த பாட்டி அக்கறையாய் சொல்ல மீண்டும் துளிர்விட்டது. இதோ அந்த தருணத்தை நெருங்கி விட்டோம் என மனதில் மகிழ்ச்சி தோன்றுகையில், றங்குகோ குறிக்கட்டுவான் றங்குகோ என பேருந்து நடத்துநரின் குரல் ஒலித்தது. படபடவென இறங்கக் களைத்துப் போன முகத்தில் கடல் காற்று இதமாக வீசி அலைமகள் கண்முன்னே அமைதியாய் படர்ந்திருந்தாள். என் கண்களும் அவள் மீது படர்ந்து ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டிருந்தது என்ன ஒரு அழகு என புகைப்படத்தில் அவளை என்னோடு அழைத்துச் செல்லலாம் என தொலைபேசியை எடுக்க அடுத்த படகு பன்னிரண்டு மணிக்கு என குரல்கள் ஒலித்தன.

நயினா தீவுக்குத் தரை வழியாகப் பயணிப்பதற்கான பாதைகள் இல்லை. குறிக்கட்டுவான் வரை பேருந்தில் சென்று பின்னர் படகுப் பயணம் தான் என கேட்டறிந்திருந்தேன். இத்தனை நாள் பேருந்து தரிப்பிடம் தான் பார்த்திருக்கிறேன் புதிதாக இருந்தது படகு தரிப்பிடம். அத்தனை படகுகள் அங்கே எம்மை சுமக்கக் காத்திருந்தன. நாங்கள் சென்ற தினம் ஒன்றும் விசேட நாள் அல்ல இருந்தும் அத்தனை சனம் நயினை நாகினியைப் பார்க்கச் செல்கின்றார்களா என கேள்வியையும் விடையும் எனக்குள்ளே எழுப்பிக் கொண்டிருந்தேன். எப்படியோ எங்களுக்கான படகு கிடைத்தது ஒவ்வொருவராய் உடற்கவசத்தை அணிந்து கொண்டிருந்தார்கள். சாகசம் எதுவும் பண்ணப் போகிறோமா என மனதில் சிறு நடுக்கம் இருந்தாலும், உடற்கவசத்தை அணிந்து கொண்டு படகில் கால் வைக்கும் போது, படபடத்தது உள்ளம். இதுவரை படகில் பயணப்பட்டதில்லை. அதுவே எனது முதல் கடல்வழிப் பயணம் என்பதனால் பயத்தின் மிகுதியால் கால்களும் கைகளும் நடுங்கின இருந்தும் ஒரு ஆர்வம்.

படகிலிருந்த படிக்கட்டில் ஏறியமர்ந்து இடம் பிடித்துக் கொண்டு பயணிக்கையில், அலைமகள் எத்தனை அழகானவள் என்பதை அன்றைக்குத் தான் உணர்ந்தேன். கரடு முரடான பாதைகளில் பேருந்துகளில் பயணித்திருக்கிறேன் ஆனால் கடல்வழி பயணம் சுகமாக இருந்தது. சுயமிகளால் அந்த பயணத்தைப் பதிவு செய்து கொண்டேன். படகின் சில்லுகள் கடல் நீரை அள்ளி சுமந்து நகர்கையில் கண்களைப் பறிகொடுத்து இயற்கையில் திளைத்த பொழுது அது. தூரத்தில் தெரிந்தது நயினை கோபுரம் எதிர்பார்ப்புகள் மேலோங்கியது. வண்ணமயமாகச் சீவி சிங்காரித்து சில கூட்டம் ஒரு பக்கம் வெள்ளை வெள்ளையாய் நாக விகாரையை தரிசிக்க மற்றொரு கூட்டம் திரண்டிருந்தது.

உச்சி வெயில் சுள்ளென்றது. இரு மருங்கிற்கும் நடுவே மிடுக்காய் நின்றது முன் வாசல் கோபுரம். நீலத்திரைக் கடல் நித்தமும் முத்தமிடும் சக்தி பீடமாக விளங்கும் நயினா தீவு இலங்கையின் ஒரு சக்தி பீடமாகும். ஆதிபராசக்தி ‘நாகபூசணி’ எனும் நாமம் பூண்டு அடியவருக்கு அருள்பாலிக்கும் அன்னை வீற்றிருக்கும் ஆலயமது. அவளைக் காணப் போகின்றோம் என்ற துடிப்பில் கோபுரத்தை கைகூப்பி வணங்கி உட்சென்றதும் மூச்சு எடுக்க முடியாத அளவிற்குப் பக்தர்கள் நிரம்பியிருந்தனர். படகு திசை மாறி காசி, ராமேஸ்வரம் ஏதும் அழைத்துச் சென்று விட்டதோ என்ற ஐயம் தோன்றும் அளவிற்கு வித்தியாசமான உலகம்.

ஒரு வழியாகக் கடவுளைத் ஹதரிசித்து விட்டு ஆலயத்தைச் சுற்றிவருகையில் மணலில் கால் வைக்கவே முடியாத அளவு வெப்பம் காலை பொசுக்கியது. நிழல் இருக்கும் இடங்களில் தடம் பதித்து ஓட்டம் பிடித்தோம். ஆலயத்தைச் சுற்றி வருகையில் கண்களைப் பறிகொடுக்கும் அளவிற்கு ஐந்து தலை நாகத்தின் பாதுகாப்பில் நளினமாக வீற்றிருக்கும் நாக புஷ்கரணியை என்றுமே மறக்க முடியாது.

தரிசித்து முடித்து அன்னையின் அன்னதானத்திற்காக அடியார்களோடு நாங்களும் அரை மணி நேரம் நின்றிருப்போம். வெயில் சுட்டெரித்தும் புசிக்கக் காத்திருந்த வரிசை நீண்டு கொண்டே இருந்தது. எப்படியோ அன்னதானத்தை இரசித்துச் சுவைக்கக் கிடைத்தது. அயலிலிருந்த நாக விகாரை செல்ல நேரமும் கழிந்தது. அடுத்த பயணத்தில் செல்லலாம் என்ற எதிர்பார்ப்போடு மீண்டும் ஆழியுடன் பயணிக்க ஆசையாய் வந்தோம். அடிக்கும் வெயில் பயணிகளைப் பிளந்து தள்ளியது. அதிலிருந்த பாட்டிக்கும் அருவியாய் கொட்டியது வியர்வை. கடல் காற்று குளிர்ச்சி தந்தாலும் கதிரவனின் கதிரொளிக்கு ஈடு கொடுக்க முடியாத அளவிற்கு வெப்பம் ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தது. நமக்கு இது ஒரு நாள் பயணம் தான் ஆனால் நயினா தீவு மக்கள் ஒவ்வொரு நாளும் பயணப்படுகையில் எத்தனை அசௌகரியங்களைச் சந்திப்பார்கள் என்ற பரிதாபமும் எனக்குள் தோன்றியது. அனைத்தையும் கடந்து மனதைக் கடல் அன்னையுடன் சங்கமித்து சற்று வாழ்க்கையை மீட்டுப் பார்க்கையில் பயணமும் முடிவுற்றது. வைர ஒளிக் கதிரால் பொசுங்கிய உஷ்ணம் குளிர்பானம் அருந்தியும் தாகம் தீரவில்லை. திரும்பி வரும் பேருந்தில் கிடைத்த இருக்கைகளைத் தக்க வைத்துக்கொள்ள அத்தனை போராட்டம். கடினமான பயணமாக இருப்பினும் வித்தியாசமான அனுபவம் தான் நயினா தீவு நோக்கிய பயணம். பயணத்தின் புதுவித அனுபவங்களை ஆளுக்கொருவராய் பகிர்ந்து கொண்டு அடுத்த சுற்றுலா பற்றி மீண்டுமொரு திட்டத்துடன் கடந்தது அன்றைய சுவாரஸ்யமான நாள். அடுத்த பயணம் செல்லும் வரை அசைபோட போதுமாக இருக்கும் அன்றைய பயணம்.







ஸ்மித் எனும் ராஜபோதை...

# அவமானத்தால் அழுதவன் மீண்டெழுந்த அதிசயம்





மகேஸ்வரன் கலைச்செல்வன்,
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

நீங்கள் மாணவர்களாகவோ அல்லது அலுவலகத்திலோ பணியாற்றலாம். அல்லது தொழில்முனைவோராக இருக்கலாம். உங்கள் கல்லூரியில், அலுவலகத்தில், தொழிலில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறீர்களா? எல்லோர் முன்னும் கூனிக்குறுகியிருக்கிறீர்களா?

உச்சத்திலிருந்து பல அவமானங்களுடன் அதலபாதாளத்தில் விழுந்து மீண்டும் உச்சம் நோக்கி உயர்ந்து வருவது ஒரு பெரும்போதை. அது ஒரு ராஜபோதை. ஸ்மித் இப்போது ராஜபோதையில் திளைத்துக் கொண்டிருக்கிறார்.

நம்மையும் திளைக்க வைக்கிறார். நம் தோல்விகளை மறந்து வெற்றியை நோக்கி வெறியோடு நகரவைத்துக்கொண்டிருக்கிறார்.

கடந்த 2018 சிட்னி விமான நிலையத்தில், பல கோடி கண்களுக்கு முன் ஒரு சிறுவனைப்போல ஸ்மித் தேம்பித் தேம்பி அழுதது இன்னமும் மனதைக் கலங்கடிக்கிறது. 2018இல் ஆஸ்திரேலிய அணி,
தென் ஆபிரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடிய வேளை மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது, பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஸ்மித்துக்கு ICC ஒரு போட்டியில் விளையாடத் தடை விதித்தது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ஸ்மித் மற்றும் வார்னர் ஆகிய இருவருக்கும் ஓராண்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க தடை விதித்தது; ஸ்மித்தை ஆஸ்திரேலியா அணித்தலைவராகத் தேர்வு செய்ய இரண்டு ஆண்டுகள் தடையையும் விதித்தது. இந்த போட்டிக்குப் பிறகு ஆஸ்திரேலியாவுக்கு திரும்பிய ஸ்மித் கண்ணீர் மல்க ஒரு பேட்டியை ஊடகங்களுக்கு வழங்கினார்.

“நான் தவறு செய்து விட்டேன்... என்னை மன்னித்து விடுங்கள்” என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தார். உலகின் முதல்தர பேட்ஸ்மேன் ஸ்டீவ் ஸ்மித். தன் தந்தையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, “என் குடும்பத்துக்கு எவ்வளவு பெரிய அவமானத்தை ஏற்படுத்திவிட்டேன். என் நாட்டுக்கு என்னால் அவப்பெயர்...

காலம் என்னை மன்னிக்குமா எனத் தெரியவில்லை. சிறுவர்களுக்கு மிகமோசமான முன்னுதாரணமாக ஆகிவிட்டேன் எனக் குற்ற உணர்வால் குறுகிப்போய், தாழ் உணர்ச்சியால் துவண்டுபோய், அவமானத்தால் மதிப்பிழந்துபோய், தலைகுனிந்து நின்ற ஸ்மித்தை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் கிரிக்கெட் உலகமே பார்த்தது.

அவர் மனம் திறந்து அழுதபோதும், தவறுக்காக மன்னிப்பு கேட்டபோதும் உலகம் அவரை ‘மோசடிக்காரர்’ என்றே மீண்டும் மீண்டும் அவமானப்படுத்தியது.

கேப்டன்ஸி பறிப்பு, ஓராண்டு காலம் கிரிக்கெட் விளையாடத் தடை, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்கள் முன் குற்றவாளிக் கூண்டு என எல்லாவற்றுக்கும் மேல் எங்கு போனாலும், பின்தொடர்ந்த ‘ஏமாற்றுகாரர்’ என்ற பட்டம். கிரிக்கெட் வரலாற்றில் இப்படி ஓர் அவமானத்தை எந்த வீரனும் சந்தித்ததில்லை. ஆனால், அத்தனை அவமானங்களையும் சுமந்தவன்தவர் தடை முடிந்து டெஸ்ட் விளையாட வந்த மூன்றே வாரத்தில், நான்கே இன்னிங்ஸ்களில் உலகின் முதல் தர பேட்ஸ்மேனாக மீண்டும் உச்சத்தில் உயர்ந்து நின்றார்..

ஸ்டீவன் ஸிமித் 2010ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் பயணத்தை தொடங்கினார்.

ஆரம்பத்தில் சுழற் பந்துவீச்சாளராக களம் இறங்கினார். ஆரம்பத்தில் இவரை அணியில் தெரிவு செய்த போது, ஆஸ்திரேலியாவில் கடும் விமர்சனங்கள் அந்த கால கட்டத்தில் ஏற்பட்டிருந்தன.

அந்த விமர்சனங்களுக்கு பெரிய முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் இவரின் வளர்ச்சி அமைந்திருந்தது. இவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் தொடக்கத்தில் ஏழாம் அல்லது எட்டாவது வீரராகவே துடுப்பெடுத்தாட களம் இறங்கினர்.

அத்துடன், தனது லெக்ஸ்பின் பந்து வீச்சினையும் தொடர்ந்து வந்தார். 2010-2011 ஆஷஸ் தொடருக்கு இவர் தேர்வு செய்யப்பட்டார் .இந்த ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலிய அணி இழந்தது இதனால் இவர் அணியில் தேர்வு செய்யப்பட்டமைக்கு பல விமர்சனங்கள் எழுந்தன.

இதனால் இவரின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விடும் என கிரிக்கெட் விமர்சகர் மற்றும் பல தரபுபட்டவர்களால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த தொடருக்குப் பின்பு, ஸ்மித்துக்கு பந்து வீச்சை விட துடுப்பாட்டதிறன் நன்றாக இருப்பதாக சிலர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்மித் தனது துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியவர், தொடர்ந்து 2013ஆம் ஆண்டு இங்கிலாந்து நடைபெற்ற ஆஷஸ் தொடரின் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். அந்த தொடரை ஆஸ்திரேலியா அணி இழந்து இருந்தாலும், ஸ்மித் தனது சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். எனவே, அதே ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடரிலும் ஸிமித் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

குறிப்பாக, மெல்பன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சதம் அடித்து ஆஸ்திரேலியா போட்டியை வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். மேலும், ஆஸ்திரேலியா ஆஷஸ் தொடரை வெல்ல முக்கிய காரணமாகவும் அமைந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்திய அணி ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது, அசத்தலாக ஆடி ரன் மழை பொழிந்தார். இந்த தொடருக்குப் பின் சறுக்கல்களையே சந்திக்கவில்லை. இவர் அனைத்து நாடுகளிலும் ரன் வேட்டையைத் தொடர்ந்தார்.

பொதுவாக ஆஸ்திரேலியா வீரர்கள் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வதில் சிரமப்படுவார்கள். மாறாக ஸ்மித் சிறந்த முறையில் சூழல் பந்து வீச்சாளர்களும் எதிர் கொண்டார். இதற்கு 2016 ஆஷஸ் தொடர் மற்றும் 2017 இந்தியச் சுற்றுப் பயணம் சிறந்த சான்றாக அமைந்தது. குறிப்பாக 2017 இந்திய சுற்றுப்பயணத்தின் போது, புனேவில் ஆடிய ஆட்டம் அனைத்து கிரிக்கெட் ரசிகர்களையும் பிரமிக்க வைத்தது.

முற்று முழுதாக சுழலுக்குச் சாதகமான ஒரு ஆடுகளத்தில் அதுவும் உலகத் தரம் வாய்ந்த சுழற்பந்து
வீச்சாளர்களுக்கு எதிராகச் சதம் கடந்திருந்தார். மற்றும் அந்த போட்டியில் ஆஸ்திரேலியா அணியை வெற்றி பெறவும் வைத்திருந்தார்.

2015 ஆஷஸ் தொடரின் போது, இங்கிலாந்து லாட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இரட்டை சதம் அடித்து அசத்தினார். 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான கேப்டனாக ஸ்மித் அறிவிக்கப்பட்டார். கேப்டனாக டெஸ்ட்போட்டி பயணத்தில் சிறந்து விளங்கினார்.

ஆஸ்திரேலியாவின் கேப்டனாக 34 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஸ்மித் 3,659 ரன்கள் மற்றும் 15 சதங்கள் 13 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக, 70.36 என்னும் சராசரியுடன் அடித்து அசத்தியுள்ளார். இவ்வாறு சிறப்பாக சென்று கொண்டிருந்த ஸ்மித்தின் கிரிக்கெட் பயணத்தில் மிகவும் மோசமான நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

அது இவரின் கிரிக்கெட் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. 2018 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணி தென் ஆபிரிக்காவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வந்தது. மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது, பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஸ்மித்துக்கு ICC ஒரு போட்டியில் விளையாடத் தடை விதித்தது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ஸ்மித் மற்றும் வார்னர் ஆகிய இருவருக்கும் ஓராண்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதித்தது ஸ்மித்தை ஆஸ்திரேலியா அணித்தலைவராகத் தெரிவு செய்ய இரண்டு ஆண்டுகள் தடையையும் விதித்தது.

இந்த தடைக் காலத்துக்குப் பிறகு டெஸ்ட்டில் ஸ்மித்தின் மீள் வருகைக்காகக் குறிக்கப்பட்ட இடம்தான் இங்கிலாந்து. பரம எதிரியின் களம், ஆஷஸ் எனும் கூடுதல் உஷ்ணம், ‘ஏமாற்றுக்காரன்’ என்னும் கேலிக்குரலால் வீழ்த்தி விடத் துடித்த இங்கிலாந்து ரசிகர்கள், இதை எதையுமே கண்டுகொள்ளவில்லை ஸ்மித். ஏழு இன்னிங்ஸ்களில் 774 ரன்களை அடித்து தனது மீள் வருகையை கிரிக்கெட் உலகத்திற்குத் தெரிவித்தார். இதில் மூன்று சதம், ஒரு இரட்டை சதம்..என அத்தியிருந்தார். மீண்டும் உலகின் நம்பர் 1 பேட்ஸ்மேன் என்கிற பட்டம்... Yes... Steve Smith is back என அவரது ரசிகர்களும் பொதுவான கிரிக்கெட் ரசிகர்களும் கொண்டாடத் தொடங்கினர். இவ்வாறாக தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைக்க ஆரம்பிக்க தொடங்கினார்.

தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் முக்கிய துடுப்பாட்ட வீரராகத் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஸ்மித், சமீபத்தில் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா சாம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொள்வதற்கு ஸ்மித் விளாசிய சதம் மிக முக்கிய பங்களிப்பினை வழங்கியது.

தொடர்ந்து இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆஷஸ் தொடரிலும் ஸ்மித் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார். தொடர்ந்து 2023 வணக்கத்திற்குரிய நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் தனது துடுப்பாட்டத்தின் மூலமாக அவுஸ்திரேலியா கோப்பையை வெல்வதற்கு முக்கிய பங்கு வகித்தார்.

கிரிக்கெட் ரசிகர்களின் வாழ்வில் இது ஓர் உன்னதமான காலம்... உலகின் மிகப்பெரிய, மிகச்சிறந்த, மிகமுக்கியமான பேட்ஸ்மேனின் ஆட்டத்தைச் சமகாலத்தில் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு.

ஸ்மித் ராஜபோதையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் மகிழ்ந்திருப்போம்.



மலையகம் 200

## பெருந்தோட்டத் தொழிலாளர்களது

# வரலாறும் சமூக உருவாக்கமும்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்,
முன்னாள் ராஜதந்திரி.

(புதன்கிழமை (06) தொடர்ச்சி...)

காட்டு வழியாக, கால் நடையாக
சுமார் 157 மைல் தூரம் கடந்து வந்த அவர்களது வாழ்க்கைப் பாதையும் கரடு முரடானது தான்.

கல்வி அறிவற்ற, அடிமட்ட உழைப்பாளர்களாக இருந்த இந்த மக்கள் சூரிய உதயமாவதற்கு முன்னதாகவே அதிகாலையில் விழித்தெழுந்து, தினமும் கடும் வெயிலிலும், மழையிலும், பனியிலும், கடுமையாக உழைத்து, எந்தவித ஆதரவற்ற நிலையில் தமது வாழ்க்கையை ஆரம்பிக்கத் தொடங்கினர்.

லயன் அறைகளில் மலசலக்கூடமோ, மருத்துவ சுகாதார வசதிகளோ இல்லாமல் வாழ்ந்த இவர்களின் வாழ்க்கை ஒரு துயர் கதை.

கோப்பித் தோட்டங்களிலும், இறப்பர் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும், இருந்த அட்டைகள் கூட இவர்களை விட்டு வைக்கவில்லை.

அட்டைகள் அவர்களது இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கின. தனக்குத் தேவையான குருதியை உறிஞ்சிய பின் கீழே விழுந்து விடுவது இவைகளின் தன்மை. ஆனால், பேராசை பிடித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமோ உழைப்பு என்னும் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டே தமது இருப்பினை வளப்படுத்திக் கொண்டிருந்தன.

பிரிட்டிஷ் தோட்டத் துரைமார்களின் பாராமுகம், ஆக்கிலன்ட், போயிட் அன் கம்பனி, நூட்ஸன், கன்ட்லர் அன் கம்பனி போன்ற பெரிய முகவர் ஸ்தாபனங்கள், இலங்கையில் வைக்கப்பட்டிருந்த படைப் பிரிவுகளைச் சேர்ந்த கமிஷன் அந்தஸ்து பெறாத அதிகாரிகளைத் தோட்டங்களில் ஓவசியர்களாகவும், சூப்ரெண்டுகளாகவும் நியமித்தன.

இவர்களில் அனேகர் இலங்கையில் தாங்கள் ஒரு குடியேற்ற நாட்டை ஸ்தாபித்தவர்களாதலால், தாங்களே மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணமும், நிறத் துவேசமும் , இவர்கள் மத்தியில் நிறைந்து காணப்பட்டன.

துரதிர்ஷ்டம் பிடித்த தொழிலாள வர்க்கத்தினரோ அடிக்கடி அவர்களுடைய கொடுமைகளுக்கும், மிருகத்தனத்திற்கும், பலியாகியமை ஒரு சோக நிகழ்வு.

அக்கால கட்டத்தில் நிலவிய கண்காணி ( கங்காணி) முறையினால் உண்டான கேடுகளும், எவ்வகையான சம்பளத்துடன் கூடிய வைத்திய லீவுகளையும், அனுமதிக்கும் எந்த சட்டங்களும் இருந்திருக்கவில்லை. இதனால், தொழிலாளர்கள் தாம் சுகவீனமுற்றிருந்தால் அல்லது வேலை செய்ய முடியாதவாறு பலவீனமாய் இருந்தால் கூட தொடர்ந்தும் வேலை செய்து கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர்.

இவ்வாறான பல நிலைமைகளால் நாட்டு சனத் தொகையில் மிகக் கூடுதலான தொழிலாளர்களின் தாய், சிசு , மரண வீதங்கள் உயர்வாகக் கணக்கிடப்பட்டது.

சுகவீனமாய் இருக்கும் பொழுது கூட வேலை செய்யத் தூண்டுவதாக அந்தக் காலத்தில் நிலவிய வேலையில்லை - கூலியில்லை ( No wrk - No pay ) என்ற பொருள்பட அமைந்த கோட்பாடு காணப்பட்டது.

1884 ஆம் ஆண்டு அன்றிருந்த ஒரு வைத்திய அதிகாரி தனது அறிக்கையில், “தொழிலாளர் ஏதும் சொத்து உடையவர்கள் அல்லர். அவர்கள் நாட்
கூலியிலேயே தங்கியுள்ளனர். நோயினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ, நோய் வந்தால் அவர்கள் ஆதரவற்ற அனாதை யாக்கப்படுவார்கள். அத்துடன், நண்பர்கள், உறவினர்கள் மேல் தங்கி வாழக்கூடிய நிலைமைக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்” என சுட்டிக் காட்டி உள்ளார்.

1893ஆம் ஆண்டு மரண வீதத்துக்காக நியமிக்கப்பட்ட ஒரு குழு தனது அறிக்கையில், 1883ஆம் ஆண்டுக்கும் 1891ஆம் ஆண்டுக்கு இடையில் சராசரி மரண வீதம் வைத்தியசாலை வாரியாக 7.42 சதவீதமாக இருக்க, தோட்டத்துறையில் அது 21 சதவீதமாகக் காணப்பட்டது எனக் குறிப்பிட்டிருந்தது.

காலை ஆறு மணி தொடக்கம் மாலை நான்கு மணி வரை வேலை செய்வதனை 1893ஆம் ஆண்டு விபரித்த வைத்தியர் ஒருவர் , “நீண்ட நேரம் , சில வேளைகளில் 10 அல்லது 11 மணித்தியாலங்கள் உண்ண உணவில்லாமல் வேலை செய்வதற்குக் காரணம் ‘கூலி’ என்னும் தப்பான எண்ண நிலையாகும் . இதனால் தேக ரீதியாக தொழிலாளர் பலவீனப்படுத்தப்பட்டவனாகக் காணப்படுகின்றான்” என்றார்.

1893ஆம் ஆண்டு குழு தனது அறிக்கையில், தோட்டங்களில் டிஸ்பென்சரிகள் ஆரம்பிக்கப்பட்டப் பின்னர் சுகாதார ரீதியாக ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது. 1920ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களது இறப்பு வீதம் 1,000க்கு 52 ஆக இருக்க, சிசு மரண வீதம் 1,000க்கு 224 ஆக இருக்க, மொத்தத் தீவில் சிசு மரண வீதம் 182 வீதம் இருந்தது” என குறிப்பிட்டிருந்தது.

1841ஆம் ஆண்டுக்கும், 1849ஆம் ஆண்டுக்கும் இடையில் குடியேறியவர்களில் 70 ஆயிரம் பேர் அல்லது இருபத்தைந்து சதவீதமானவர்கள் மரணம் அடைந்தனரென அன்றைய ‘கொழும்பு ஒப்சேவர்’ அறிவித்தது.

பெருந்தோட்டத் துறையில் 1840ஆம் ஆண்டுக்கும் 1950ஆம் ஆண்டுக்கு இடையில் தொழிலாளர்கள் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் குடி பெயர்ந்து கொண்டிருந்த ஒரு நிலைமையை அவதானிக்க முடியும். இந்த குடிப்பெயர்ச்சியை மிதக்கும் குடிப்பெயர்ச்சி ( Folting Migration ) எனக் கூறலாம்.

கோப்பி பயிர்ச்செய்கை உருவாக்கப்பட்டதனைத் தொடர்ந்து 1840ஆம் ஆண்டுக்கும் 1881ஆம் ஆண்டுக்கும் இடையில், ஆண்டு தோறும் தொழிலாளர் குடியேற்றம் அதிகரித்து காணப்பட்டது.

1881ஆம் ஆண்டுக்கும் 1890ஆம் ஆண்டுக்கும் இடையில் கோப்பிக் கைத்தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக குடியேற்றம் குறைவடைந்தது.

தேயிலைத் தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் 1891ஆம் ஆண்டுக்கும் 1900ஆம் ஆண்டுக்கும் இடையில் குடியேற்றம் விரிவடையத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஏற்பட்ட குடிமக்கள் தொகையில் ஏற்பட்ட இயற்கையான அதிகரிப்பின் காரணமாக இவர்களின் சனத்தொகை ஐந்து சதவீதத்தால் அதிகரித்தது.

இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட திடீர் சுபீட்ச நிலையின் காரணமாக, 1923ஆம் ஆண்டுக்கும் 1928ஆம் ஆண்டுக்கும் இடையில் தொழிலாளர்கள் குடியேற்றத்தில் அதிகரிப்பு காணப்பட்டது.

பொருளாதார மந்தம் , அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இரண்டாம் உலகப்போர், போன்றவற்றின் காரணமாக 1931ஆம் ஆண்டுக்கும் 1945ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தொழிலாளர்கள் இலங்கையில் இருந்து வெளியேறத் தொடங்கினர். அத்துடன், இந்தியாவில் அக்கால கட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த குடிப்பெயர்ச்சி தடையின் காரணமாக இலங்கையில் தொழிலாளரின் குடியேற்றத்திலும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

யுத்தமானது நிறைவுக்கு வந்த பின்னர் 1946ஆம் ஆண்டு தொடக்கம் 1949ஆம் ஆண்டு வரையும் குடியேற்றத்தில் கூடுதல் அதிகரிப்பு ஏற்பட்டது.

இவ்வாறு இந்தியாவிலிருந்து வருகை தந்த தொழிலாளர்கள் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், வேதனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

நிலப் பிரபுத்துவ சாதி அமைப்பினை எவ்வாறு பெருந்தோட்டங்களில் வெற்றிகரமாக பயன்படுத்துவது என்பதை அன்றைய வெள்ளைத்துரை மார்களுக்கு நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஆலோசனையாகவும் இருந்தது.

தொழிலாளர் வர்க்கத்தினர் கல்வி அறிவற்றவர்களாகவும், தேர்ச்சியற்ற பாமரர்களாகவும் இருக்கக் கூடிய விதத்திலும், நிர்வாகிகள் கல்வி அறிவு உள்ளவர்களாகவும், தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கக் கூடிய விதத்தில் பெருந்தோட்டத்துறை அமைப்பு செய்யப்பட்டது.

இதில் பெரும்பான்மையான தொழிலாளர்களிடம், நிர்வாகம் எதிர்பார்த்ததெல்லாம், தமது கட்டளைகளை நிறைவேற்றக் கூடிய தன்மை கொண்ட உழைப்பை மட்டுமே ஆகும்.

தேயிலை உற்பத்திக்கு பெரிய தொழிற்சாலைகளும், நவீன தொழில்நுட்பமும், அதே சமயம் பெருமளவு நிரந்தரமான தேர்ச்சியற்ற தொழிலாளர் அணி தேவைப்பட்டது .

இதனைப் பெரும் மூலதனம் கொண்ட பிரிட்டிஷ் நிறுவனம் தனது செல்வாக்கிற்கு உட்படுத்தியது. இதே நேரம் சார்பு மூலதனத்துவம் இலங்கையில் வேகமாக வளரலாயிற்று. இதே காலகட்டத்தில் சர்வதேச அரங்கில் மூலதனத்துவம் ஏகாதிபத்தியமாக பரிணாமம் அடைய அதில் இலங்கையும் பிணைக்கப்பட்டது.

இவ்வாறான விரிவாக்கத் தன்மையினால் இலங்கையில் குடியேற்றப்பட்ட தொழிலாள வர்க்கத்தினர் பெருகி வரும் ஏனைய தொழில்களுக்கும் உள்வாங்கப்பட்டனர்.

(தொடரும்...)

### கிழக்கு மாகாண ஆளுநரால்

# புதிய தலைவர்களுக்கு நியமனம் வழங்கி வைப்பு

**கனகராசா சரவணன்**

கிழக்கு மாகாண அதிகார சபைகளுக்கான தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமித்து, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கிவைக்கும் நிகழ்வு திருகோணமலை ஆளுநர் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை(05) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவராக ஜி.சுகுமாறன், கிழக்கு மாகாண சுற்றுலா பணியக தலைவராக எம்.ஜி.பிரியந்த மலவனகே, கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தலைவராக ரஜினி கணேசபிள்ளை, கிழக்கு மாகாண சாலை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலைவராக கித்சிறி நவரத்ன, கிழக்கு மாகாண முன் பள்ளிக் கல்வி பணியக தலைவராக அ.விஜயானந்தமூர்த்தி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர வழங்கி வைத்தார்.

இதன்போது நிறுவனங்களின் புதிய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஆளுநர் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும் என்றும் அரசியல் தலையீடுகள் இன்றி தமது சேவைகளை ஆற்றக்கூடிய சூழலை உருவாக்குவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





எம்.ஜி.பிரியந்த மலவனகே



ஜி.சுகுமாறன்



ரஜினி கணேசபிள்ளை



கித்சிறி நவரத்ன





### கிழக்கு மாகாண

# இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்கள்

**வி.ரி.சகாதேவராஜா**

கிழக்கு மாகாணத்தில் 2024ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் திங்கட்கிழமை (04) இதனை வெளியிட்டு வைத்தார்.
கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் விருதுகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் விபரம்.

அதன்படி, தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் விபரம் வருமாறு,

**வித்தகர் விருது**

1. ஜனாப். ஹயாத்து முஹமது ஹலால்தீன் (இலக்கியம்) - திருகோணமலை
2. பரமேஸ்வரி இளங்கோ (இலக்கியம்) - மட்டக்களப்பு
3. ஜனாப். உதுமாலெப்பை முகம்மது பௌஸ் (இலக்கியம்) - மட்டக்களப்பு
4. ஜெயக்கொடி டேவிட் (இலக்கியம்) - அம்பாறை
5. பிடபிள்யு. நந்தினி (இலக்கியம்) - அம்பாறை
6. பி.டி.கருணாரட்ண (நாட்டாரியல்) - அம்பாறை
7. ஜனாப். உதுமாலெப்பை ஆதம்பாவா (நாட்டாரியல்) - அம்பாறை
8. பி.டி.ஜி.பந்துல குமார (ஆற்றுகை) - அம்பாறை
9. ஜனாப். சுபைர் ரபீக் (ஊடகம்) - அம்பாறை
10. சுலோஜனா தேவராஜன் (ஆற்றுகை) - திருகோணமலை
11. இந்திராகாந்தி ராமலிங்கம் (ஆற்றுகை) - திருகோணமலை
12. தேவநாயகம் அலோசியஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு
13. கலாநிதி. முத்துராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா (பல்துறை) - மட்டக்களப்பு
14. அல்பேர்ட் சிவகாமிதேவி (பல்துறை) - அம்பாறை
15. ஜனாப். அச்சிமுஹமது தாஜீன் (பல்துறை) - அம்பாறை

**இளங்கலைஞர் விருது**

1. ஜனாப். நஸார் முகம்மது இஃஜாஸ் (இலக்கியம்) - திருகோணமலை
2. ஜனாபா. றுஸீட் பாத்திமா முஜாமலா (இலக்கியம்) - அம்பாறை
3. நதீகா போபிட்டிய (இலக்கியம்) - அம்பாறை
4. ஏ.நில்மினி சமரதுங்க (இலக்கியம்) - அம்பாறை
5. ஜனாபா. முஹம்மது ஹனிபா ஜிப்ரியா (நாட்டாரியல்) - மட்டக்களப்பு
6. தங்கவேல் சுமன் (நாட்டாரியல்) - மட்டக்களப்பு
7. ஜனாப். அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸ் (ஊடகம்) - அம்பாறை
8. வேதாரணியம் ஹோகுலரமணன் (நுண்கலை) - மட்டக்களப்பு
9. கேதாரிணி சிவாநந்தராஜா (ஆற்றுகை) - திருகோணமலை
10. ராஜேந்திரம் தனஞ்செயன் (ஆற்றுணடக) - மட்டக்களப்பு
11. ஆர்.சி.தரங்கனி (ஆற்றுகை) - அம்பாறை
12. கதிரேசன்பிள்ளை சந்திரமோகன் (ஆற்றுகை) - மட்டக்களப்பு
13. ஆர்.எஸ்.பள்ளேகெதர (ஆற்றுகை) - அம்பாறை
14. சண்முகம் பிள்ளை செல்வபிரகாஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு
15. சுந்தரலிங்கம் கிஷானி (ஆற்றுகை) - மட்டக்களப்பு
16. எச்.எம்.மாலனி ஹேரத் (ஆற்றுகை) - அம்பாறை
17. ஜனாப். ஜுனைட் முஹம்மது இஹ்சான் (பல்துறை) - திருகோணமலை
18. ஜனாப். முஹம்மது முஸ்தபா ஹிஜாஸ் அஹமட் (பல்துறை) - அம்பாறை


சிறந்த நூற் பரிசு (சாஹித்ய விருது)

1. புதுக்கவிதை - ‘புழுதி’ - சிவானந்தராஜா கதன் (காரையன் கதன்) - அம்பாறை
2. புலமைத்துவ ஆய்வு - ‘மட்டக்களப்பு மந்திர சடங்குகள்’ அருளானந்தம் சுதர்சன் - அம்பாறை
3. மரபுக்கவிதை ‘நிலவைக் கேட்டுப்பார்’ - ஜனாப். முஹம்மது சொலிஹ் அப்துல் ஹை - மட்டக்களப்பு
4. நாவல் - ‘ஆறாத வடு’ - முருகையா சதீஸ் - திருகோணமலை
5. வரலாறு ‘வரலாற்று சிறப்பு மிக்க அகஸ்தியர் ஸ்தாபனம்’ - தவராஜா தனுஷ்கர் - திருமலை
6. சிறுகதை ‘தைலாப் பெட்டி’ - ஜனாப். அலியார் பீர் முகம்மது - அம்பாறை
7. சிறுவர் இலக்கியம் - ‘வண்டில் மாமா’ - ஜனாப். அ. மீரா முகைதீன் - திருகோணமலை
8. நாடகம் - கூத்து - வீதி நாடகங்கள் பனுவலும் ஆற்றுகையும் - சுந்தரலிங்கம் சந்திரகுமார் - மட்டக்களப்பு
9. இலக்கிய சஞ்சிகை - ‘அவரி’ - சித்தி மஷூனா சுஹூறுதீன் - அம்பாறை
10. நாட்டார் இலக்கியம் - ‘இளவேனிற் காலமும் கானங்களும்’ - ஜனாப் ஐ.ஏ.ஹஸன்ஜி - திருகோணமலை
11. அ.சமூக விஞ்ஞானம் (ஆயுள் சுவதம்) - ‘நலன் தரும் மருத்துவம்’ - ஜனாப். முஹம்மது இஸ்மாயில் முஹம்மது பைஸல் - அம்பாறை
12. ஆ.சமூக விஞ்ஞானம் (ஆன்மீகம்) - ‘இந்துமத மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஒரு பார்வை’ - அருளம்பலம் குகராஜா - திருகோணமலை
13. ‘சமூக விஞ்ஞானம்’ (ஜோதிடம்) - ‘மனையடி சாஸ்த்திரம்’ - கணபதிப்பிள்ளள விஸ்வலிங்கம் - மட்டக்களப்பு

இஸ்ரேல்

இஸ்ரேலின் பாதுகாப்புத்துறை அமைச்சர்

# பதவி நீக்கம்



இஸ்ரேலின் பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவ் காலண்ட் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

காசாமுனையில் ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து கடந்த ஓராண்டுக்கும் மேலாக, இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேபோல், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனானில் ஆதிக்கம் செலுத்தும் ஹிஸ்புல்லா அமைப்பினரோடும் இஸ்ரேல் போரிட்டு வருகிறது. மேலும், ஈரான் மீதும் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த சூழலில், இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவ் காலண்ட் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது செயற்பாடுகள் மீது நம்பிக்கை இல்லாததால், யோவ் காலண்ட்டை பதவிநீக்கம் செய்ததாக, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார் என, அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இதையடுத்து, இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்த காட்ஸ், பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பதவியேற்க உள்ளார் எனவும் வெளியுறவுத்துறை அமைச்சராக கிதியோன் பதவியேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவி நீக்க நடவடிக்கை குறித்து பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையில், “போரின் ஆரம்பகட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சரின் செயல்பாடுகள் நல்ல பலன்களைக் கொடுத்தன. அவர் மீது நம்பிக்கை இருந்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக அவரது செயல்பாடுகள் நம்பிக்கை அளிக்கும் விதமாக இல்லை.

போரை வழிநடத்துவது குறித்து அமைச்சரவை எடுத்த முடிவுகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஒத்துப்போகவில்லை. இதை சரிசெய்ய நான் நிறைய முயற்சி செய்தேன். ஆனால், எங்களுக்கு இடையிலான பிளவு மேலும் அதிகரித்து விட்டது. இதன் பலனை எங்கள் எதிரிகள் அனுபவித்தனர். இது மேலும் தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. எனவே, பாதுகாப்புத்துறை அமைச்சரின் பதவிக்காலத்தை முடிவுக்கு கொண்டு வர முடிவு செய்தேன்” என்று தெரிவித்துள்ளார்.

பதவி நீக்கத்தைத் தொடர்ந்து யோவ் காலண்ட், ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இஸ்ரேலின் பாதுகாப்பு என்பதே எப்போதும் எனது வாழ்வின் முக்கியமான இலட்சியமாக இருந்து வருகிறது. இனிமேலும் அப்படியே இருக்கும்” என்று பதிவிட்டுள்ளார்.

கொலம்பியா


## கொலம்பியாவில் நிலநடுக்கம்

கொலம்பியாவின் மேற்கு கடற்கரைக்கு அருகே, செவ்வாய்க்கிழமை (05) திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் 5.1 ரிக்டர் அளவில் பதிவானதாக, ஜெர்மன் புவி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம் முதலில் 5.25 டிகிரி வடக்கு அட்ச ரேகை மற்றும் 77.50 டிகிரி மேற்கு தீர்க்க ரேகையில் இருக்கும் என தீர்மானிக்கப்பட்டது.

நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்ததால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.



பிரான்ஸ்

‘டிக்-டொக்’ செயலிக்கு எதிராக

## பிரான்ஸில் வழக்கு




குழந்தைகளிடையே மன அழுத்தம், தற்கொலை போன்றவற்றை ‘டிக்-டொக்’ செயலி தூண்டுவதாகக் கூறி ‘டிக்-டொக்’ செயலிக்கு எதிராக 7 வழக்குகள், பிரான்சில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரபல சமூகவலைத்தள செயலியான ‘டிக்-டொக்’ தனியுரிமையை மீறுவதாக, கூறி பல நாடுகள் அதற்குத் தடை விதித்துள்ளன.

இதற்கிடையே, பிரான்சில் இரு சிறுமிகள் தற்கொலைக்கு ‘டிக்-டொக்’ செயலி காரணமாக இருந்ததாகவும், 4 பேர் தற்கொலைக்கு முயன்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து, குழந்தைகளிடையே மன அழுத்தம், தற்கொலை போன்றவற்றை ‘டிக்-டொக்’ செயலி தூண்டுவதாகக் கூறி ‘டிக்-டொக்’ செயலிக்கு எதிராக 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இது தொடர்பான வழக்கு விசாரணை பாரீஸ் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் ‘டிக்-டொக்’ செயலிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்படுவது இதுவே முதன்முறை ஆகும். இதனால் ‘டிக்-டொக்’ செயலி புதிய சிக்கல்களை எதிர்கொள்கிறது.

இராமநாதபுரம்

பாம்பன் ரயில் பாலம்

## 20க்குள் திறக்கப்படும்?

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள ரயில் பாலம், எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே 545 கோடி ரூபாயில் சுமார் 2 கிலோ மீற்றர் நீளத்திற்கு புதிதாக ரயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் மையப்பகுதியில் கப்பல்கள் கடந்து செல்வதற்கு வசதியாக 77 மீற்றர் நீளமும், 650 டன் எடையும் கொண்ட செங்குத்து வடிவிலான மேல்நோக்கி திறந்து மூடும் வகையில் தூக்குப்பாலம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்த புதிய பாலத்தில் 3 முறை சரக்கு ரயில்களை இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. தூக்குப்பாலத்தைத் திறந்து மூடி பல்வேறு கட்ட சோதனைகளும் செய்யப்பட்டன.

பாலத்தை ஆய்வு செய்வதற்காக தெற்கு ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி எதிர்வரும் 13ஆம் திகதி பெங்களூருவிலிருந்து சிறப்பு ரயில் மூலம் மண்டபம் வருகிறார்.

தொடர்ந்து அவர் 2 நாட்கள் தங்கி புதிய ரயில் பாலத்தை முழுமையாகப்



பார்வையிட்டு ஆய்வு செய்கிறார். இந்த ஆய்வுக்குப் பின்னர் புதிய ரயில் பாலத்தின் திறப்பு விழா திகதி அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படும் என கூறப்படுகிறது.

அதன்படி வருகிற 20ஆம் திகதிக்குள் புதிய ரயில் பாலம் திறப்பு விழா நடந்து, ரயில் போக்குவரத்து தொடங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாம்பன் புதிய ரயில் பாலத்தைத் திறந்து வைப்பதற்கு பிரதமர் நரேந்திர மோடி, ராமேஸ்வரம் வரவுள்ளதாகவும் ரயில்வே அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம்

## நடிகை கஸ்தூரிக்கு எதிராக விசாரணை

நடிகை கஸ்தூரி மீது, தெலுங்கு பேசும் பெண்கள் பற்றி அவதூறான கருத்துக்களைக் கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், அவரிடம் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



சென்னை - எழும்பூரில் இந்து மக்கள் கட்சி சார்பில் பிராமணர்களைப் பாதுகாப்பதற்காக வன்கொடுமை தடுப்பு சட்டத்தைப் போல புதிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி, அக்கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய நடிகை கஸ்தூரி மீது, தெலுங்கு பேசும் பெண்கள் பற்றி அவதூறான கருத்துக்களைக் கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மீது பல்வேறு பொலிஸ் நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இதன்பேரில், அவரிடம் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் லீக்:

# ஸ்போர்ட்டிங்கிடம் வீழ்ந்த சிற்றி

மிலனிடம் தோற்ற மட்ரிட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், போர்த்துக்கல் கழகமான ஸ்போர்ட்டிங்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை பில் பொடென் பெற்றதோடு, ஸ்போர்டிங் சார்பாக விக்டர் யோக்கெரஸ் மூன்று கோல்களைப் பெற்றதோடு, மக்ஸிமில்லியானோ அரகோ ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தோற்றது.

ஸ்பானிய லா லிகா கழகமான மட்ரிட் சாப்ராக வின்ஷியஸ் ஜூனியர் ஒரு கோலைப் பெற்றார். மிலன் சார்பாக மலிக் ஜாஃவ், அல்வரோ மொராட்டா, டிஜ்ஜனி றெஜின்டர்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற ஜேர்மனியக் கழகமான பயெர் லெவர்குசனுடனான போட்டியில் லூயிஸ் டியஸின் மூன்று கோல்கள், கோடி கக்போவின் ஒரு கோலோடு 4-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

இதேவேளை, பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை இன்னொரு இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.



## ஐ.பி.எல் ஏலத்தில் ஸ்டோக்ஸ் இல்லை

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கின் 2025ஆம் ஆண்டு பருவகால வீரர்கள் ஏலத்தில் பதிவு செய்யப்பட்ட 1,574 பெயர்களில் டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸின் பெயர் காணப்படவில்லை.

கடந்த பருவகால ஐ.பி.எல்லிலும் ஸ்டோக்ஸ் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


தற்போதைய ஏலத்தில் பங்கேற்காவிட்டால் அடுத்தாண்டு ஏலத்திலும் தற்போதைய விதிமுறைகளின்படி பங்கேற்க முடியாதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்குறித்த பட்டியலில் இத்தாலியைச் சேர்ந்த தோமஸ் ட்ரக்காவின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

## அணித்தலைவர் இங்லிஸ்

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் அவுஸ்திரேலிய அணிக்கு ஜொஷ் இங்லிஸ் தலைமை தாங்கவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவர் பற் கமின்ஸுக்கு மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், மர்னுஸ் லபுஷைன், ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளதுடன், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவர் மிற்செல் மார்ஷ் கர்ப்பகால விடுமுறையில் உள்ள நிலையிலேயே இங்லிஸ் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.




## பார்சிலோனா செல்லும் சாலா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலாவின் லிவர்பூலுடனான ஒப்பந்தமானது பருவகால முடிவில் காலாவதியாகும்போது 32 வயதான சாலாவைக் கைச்சாத்திட ஆர்வம் காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், அடுத்த பருவகால கழக உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் வகையில் சாலாவைக் கைச்சாத்திட சவுதி அரேபியக் கழகமான அல்-ஹிலால் விரும்புகின்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

## சிட்னி தலைவர் வோர்னர்



அவுஸ்திரேலியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான பிக் பாஷ் லீக்கின் சிட்னி தண்டரின் அணித்தலைவராக டேவிட் வோர்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வோர்னரின் தலைமைத்துவத் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்தே தண்டரின் அணித்தலைவராக கிறிஸ் கிறீனை வோர்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக 2011ஆம் ஆண்டும் தண்டருக்கு வோர்னர் தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 07, நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.